Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-17 31-05-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 102



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10) விநாயகர் வீதி, மயில்பிட்டி.

## திருமலைநகர் புத்தர்சிலை விவகாரம் குறித்து

# மட்டு-தமிழரசுக்கட்சி பா.உ கள்

# தமிழ்ச்செல்வன் தீவிர பரிசீலனை

## வேறுபல விடயங்களும் ஆராய்வு

(அலுவலக நிருபர்)

**திருமலைநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை குறித்து எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பாகவும் இச்சிலை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அகற்றப்படாதுபோனால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன், அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் கலந்துரை யாடல் ஒன்றைநடத்தினார். அத்தோடு இச்சந்திப்பில் வேறும் பல முக்கிய விடயங்களும் ஆராயப்பட்டன.**

நேற்று மாலை ஐந்துமணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் மாவட்ட ரீதியான தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பின் ஓர் அங்கமாகவே மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சந்திப்பில் திருகோணமலையில் அமைக்கப்பட்ட புத்தர்சிலையினால் ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் தொடர்பாகவும், அதனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அகற்றப்படாத பட்சத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும், புரிந்துணர்வு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனந்த தேசப்பிரியவின் வாகன ஓட்டுநர் நேற்று சுட்டுக்கொலை; ஒருவர் காயம்



சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரியவின் வாகன ஓட்டுனர் முகமட் பௌசன் நேற்று அம்பாறை மாவட்டம் வீரமுனையில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவருடன் பயணித்த இவரின் நண்பர் முகமட் நாசர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பௌசன் அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் உள்ள தனது உறவினரைச் சந்திக்கச் சென்றபோதே வீரமுனையில் வைத்து இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.இக்கொலை தொடர்பாக சம்மாந்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி செறன்பெரேரா விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

-கைதடிப் பாலத்திற்கு சமீபமாக-

## பேருந்து-பாரவூர்தி விபத்து; ஆறு பயணிகள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடிப்பாலத்திற்கு சமீபமாக இடம்பெற்ற பேருந்து-பாரவூர்தி விபத்தொன்றில் இரு யுவதிகள் உட்படஆறுபேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இவ் விபத்தில்மல்லாகத்தைச் சேர்ந்த சு.தர்சினி (வயது-20),சங்கானையைச்சேர்ந்த பிரியதர்சினி (வயது-18)மற்றும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த த.பிரகாஸ்கண்ணா (வயது-20) தாவடியைச் சேர்ந்த தி.திருச்செல்வம் (வயது.24),மாசியப்பிட்டியைச்

(12 ஆம்பக்கம் பார்க்க)

## சிறிலங்காப் படையினருக்கு எதிராக இன்று மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்தில் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடாத்தப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கட்டடப்பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்கள் எடுத்துச்செல்வதற்கு படையினர் தடைவிதித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவிருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இன்று காலை ஒன்பது மணிக்கு வாகரைப் பிரதேசத்தில ஆரம்பிக்கவிருக்கும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி மாங்கேணியில் அமைந்துள்ள சிறிலங்காப் படை முகாமைச் சென்றடையவிருப்பதாகவும், இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால் அரசுக்கான ஆதரவு விலக்கப்படும்

**- ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை**

பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி சந்திரிகா கையெழுத்திட்டால் அரசுக்கான ஆதரவை ஜாதிக ஹெல உறுமய விலக்கிக் கொள்ளும் என அத்துரலியே ரத்ன தேரர் அறிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதிலும் ஜே.வி.பிக்கும், தமக்கும் ஒற்றுமை இருக்கலாம் ஆனால் இரு அமைப்புகளுக்குமிடையில் அனைத்துப் பிரச்சினைகளிலும் பாரிய வேறுபாடுகள் உண்டு.

1982 ஆம் ஆண்டு ஜே.வி.பி யினர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தனர். ஆனால் தற்போது நிலைமை வேறு. அவர்களது கொள்கைகள் காலத்துக்கு காலம் மாறக் கூடியவை. இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருப்பதை ஜே.வி.பி ஒப்புக்கொள்கிறது. ஆனால் தாம் அதை நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நாளை மறுதினம் அனுஷ்டிக்க ஏற்பாடு!


### தமிழீழ மாணவர்அமைப்புத் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் இவ்வாண்டு யூன் மாதம் இரண்டாம் திகதி சகல மாவட்டங்களிலும் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாகத் தமிழீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் எதிர்காலம் வளமாக அமைய வேண்டும் என்ற உயர் நோக்கோடு தமிழ் மாணவர் பேரவையை அமைத்து தன்னை அர்ப்பணித்து தமிழீழ விடுதலைக்கான பயணத்தில் முதல் மாவீரரான பொன் சிவகுமாரன் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பகால மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளராகப் பணியாற்றி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் முரளி ஆகிய இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)



## அரசியல்துறை மகளிர் பிரிவின் இல்ல மெய்வன்மைப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவின் மாவட்ட ரீதியான இல்ல மெய்வல்லுனர் போட்டி நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளை ஆரம்பிக்கும் முகமாக பொதுச் சுடரினைச் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றினார்.

தொடர்ந்து மாவீரர் பொதுப்படத்திற்கு சுடர் ஏற்றப் பட்டது. போட்டியாளர்களினதும் நடுவர்களினதும் உறுதியுரையினையடுத்து தூயவன் அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபனின் ஆசியுரையுடன் மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகின. கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவாணன் விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டுசுட்டானில் வீரமுரசு நிகழ்வும் சமகால அரசியல் கருத்தரங்கும்

(ஒட்டுசுட்டான்)

முல்லை மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் ஒட்டு சுட்டான் பிரதேச அரசியல் துறை யினரால் நடாத்தப்பட்ட வீரமுரசு நிகழ்வும், சமகால அரசியல் கருத் தரங்கும் சம்மளங்குள கிராமத்தில் நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை சம்மளங் குளம் அ.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி சுகந்தி விஜிதரன் தலை மையில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் ஏற்ற,அக்கிராம மாவீரர் களின் திருவுருவப்படத்திற்கு பொது மக்கள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவிக்ககலைநிகழ்வுகளும், கருத் தூட்டல்களும் நடைபெற்றன.

இதில் கருத்துரைகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம், வலயப் பொறுப்பாளர் புரட்சி நிலவன் ஆகி யோர் வழங்கினர்.

இங்கு உரையாற்றியோர் நாம் இன்று சிறு சமாதானம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் உள்ளோம் .

போராட்டத்திற்கு மக்கள் வழங்கிய ஒத்துழைப்புத் தான் இந்த சமாதானம் வருவதற்குக். காரணம் எந்தவொரு சக்தியாலும் அழிக்க முடியாதளவுக்கு நாம் பலமாக உள் ளோம்.

ஆனால் சிங்கள அரசோ இடைக் கால நிர்வாகம்,சுனாமி பொதுக் கட்டமைப்பு என்று பேசித் தனது நாடகத்தை அரங்கேற்றி வருகிறது.

இந்த நாடகத்தின் செயற்பாடே 1948ஆம் ஆண்டு முதல் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் வாதிகளால் மேடை ஏற்றப்பட்டு வருகிறது. ஒப்பந்தங்களில் கிழித் தெறியப்பட்டன.

ஆனால் எமது தேசியத் தலைவர் கையெழுத்து வைத்துக் கொடுத்த ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளாகியும் கிழித்தெறியப்படவில்லை.இதற்குக் காரணம் மக்கள் எல்லைப்படை மாணவர் படை,துணைப்படை என காவல் நின்ற வேளை புலிகள் தமது யுத்த தந்திரத்தின் மூலம் படையை வென்றெடுக்க சாதகமாய் இருந்தது. இதனால்தான் எரிக்சூல்கெய்ம் வந்தால் என்ன, யசூசி அகாசி வந்தால் என்ன இந்தப் வன்னிக்கு வரக்கூடிய அளவு இந்தப் போராட்டம் நியாயமானது என சர்வ தேசம் உணரக் கூடியளவு வளர்ந் துள்ளோம்.

இருந்தபோதிலும் சிறிலங்கா அரசு இந்தச் சமதான காலத்தில்தான் நிழல் யுத்தத்தை நடாத்தி வரு கின்றது. இந்த செயற்பாட்டை இனியும் தொடரவிடக்கூடாது. நாம் முப்படைகளையும் கொண்ட ஒரு தமிழர் படையாக உள்ளோம். எனவே எம்மைச் சீண்டி போருக்குத் தந்திர மாக இழுக்கும் சிங்கள அரசுக்குப் பதிலடி கொடுக்கப் தயங்கக்கூடாது. இந்த18000இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் கனவையும் நனவாக்க வேண்டும் நாம் இழப்புக்களைக் கண்டு அஞ்சுபவர்கள் அல்ல சமதா னம்என்று வந்தால் நாம் சமாதானத் திற்குத்தயார். அதை விட்டு எம்மைச் சீண்டுவதுடன் பேச்சுவார்த்தை யையும், இழுத்தடிப்பதுடன் போருக்குத் தயாரானால், அதற்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும்.ஆகவே எம்மைநாம் பலப் படுத்திக்கொண்டு எம்மை நாம் யார்என்று நிரூபிக்கவேண்டும்.நாம் மீண்டும்எல்லைப்படை, கிராமியப் படை, துணைப்படைஎன உருவா கின்றோம்என்றசெய்தி சிங்கள ஆட்சியாளர்களுக்கு சென்றடைய வேண்டும்: என்ற கருத்துக்களை முன்வைத்தனர்.

## வவு.மாவட்ட நீதிபதிக்குக் கொலை அச்சுறுத்தல் சந்தேக நபர் ஒருவர் பொலிசாரால் கைது

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழி யனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்து கடிதம் எழுதியதாக இளை ஞன் ஒருவரை சந்தேகத்தின் பெயரில்வவுனியாப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தமிழ் ஆயுதக்குழு ஒன்றின் கடித தலைப்பைத் தயாரித்து மேற்படி இளைஞன் கடிதத்தை வரைந்துள் ளதுடன், மேலும் இதே கடித வசன அமைப்புக்களுடன் அரச அதிகாரி ஒருவருக்கும் கண்ணிவெடி அகற்றும்தொண்டர் நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி ஒருவருக்கும் எழுதப்பட்ட இரண்டு கடிதங்களும் கைப்பற்றப்பட்டுள் ளதாகப் பொலிசார் தெரிவித் துள்ளனர்.

இந்தக் கடிதம் அஞ்சல் செய் வதற்குத் தயாராக இருந்த நிலை யில் சந்தேக நபருடைய அறையில் இருந்து மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். கடந்த 25ஆம்திகதி நீதிபதிக்குக் கடிதம் கிடைத்ததை அடுத்து வவுனியாப் பெலிசாருக்கு நீதவான் முறைப்பாடு செய்தார். வன்னிப்பிராந்திய பிரதி பொலிஸ்மாஅதிபர் மகிந்த பத் தேவலவின் பணிப்பிற்கு அமைய சிரேஷ்ர பொலிஸ்அதிகாரி தென்னக் கோன் பொறுப்பில் விஷேட பொலிஸ் குழு அமைத்து விசாரணைகள் இடம் பெறுகின்றன.

பொலிசாருக்குக் கிடைத்த தக வல்கள்,கடிதங்கள் இவற்றை அடுத்து சந்தேக நபர் கைது செய் யப்பட்டு வவுனியா பதில் நீதவான் எஸ்.சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இவரை விசாரணை செய்த பதில் நீதவான் யூன் மாதம் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக் குழுவின் கவனத்திற்கு உடனடி யாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும்பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேசதொண்டர் நிறுவனம்ஒன்றில் பணியாற்றிவருபவர் என்பது குறிப் பிடத்தக்கது. (21)

## மன்னார் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்

( வவுனியா செய்தியாளர்)

மன்னார் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்னார் அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு மன்னார் மாவட்டஅரச அதிபர் வே.விஸ்வலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். இக் கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான சிவநாதன் கிஷோர், .செல்வம் அடைக்கலநாதன் , சிவசத்தி ஆனந்தன், சதாசிவம் கன கரத்தினம், விணோநோகராதலிங்கம், ஆகியோர் உட்பட விவசாயத் திணைக் களத்தின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (10)


## தமிழீழ மாவட்ட முறைமன்று மல்லாவி.

### பகிரங்க அறிவித்தல்

வழக்கு இலக்கம் :- அ. 01/2005 குற்றவியல்.

மேற்படி வழக்கில்,எம்.டி-90 கொண்டா இன உந்துருளி ஒன்று மாங்குளம் காவல்பணிமனையினரால் கண் டெடுக்கப்பட்டு மல்லாவி தமிழீழ மாவட்ட முறைமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இவ் உந்துருளி தொடர்பில் உரித்துடையோர் தகுந்த ஆதாரங்களுடன் இப் பகிரங்க அறிவித்தல் பிரசுரிக் கப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களினுள் மன்றில் தோன்றிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். தவறும் பட்சத்தில் குறித்த உந்துருளி அரச உடமையாக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

பதிவாளர்,
தமிழீழமாவட்ட முறைமன்று,
மல்லாவி.

(சி.12026)

## பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பகிரங்க ஏல விற்பனை

பின்வரும்வாகன உதிரிப்பாகங்கள் பகிரங்க ஏலத் தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

காலம்:- 04.06.2005ஆம் திகதி காலை 10.30 மணி

இடம்:- பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், மொத்தவிற்பனைநிலையம்,வாடியடி, பூநகரி.

01.லேலன்ட்பாரவூர்தி பாவிக்கப்பட்ட கௌசிங் செற்-01.

02.லேலன்ட்பாரவூர்தி பாவிக்கப்பட்டபின் வில்லுத் தகட்டுச் செற்-02

03.இரு சில்லு உழவியந்திர அச்சு செற்-01 (ரயர்,ரீயூப் உட்பட)

04.பாவித்த 90 அம்பியர் மின்கலம்-01

05.பாவித்த பாராவூர்தி ரயர்,ரீயூப்

06. லேலன்ட் பாரவூர்தி பாவித்த றிம்-04

இங்ஙனம்,
கூட்டுறவுச்சேவையிலுள்ள,
(கா.கார்த்திகேசு),
தலைவர்,
பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி.12168)

## விளம்பரம்

### 10 நிமிடத்தில் படங்கள்!!!

பாஸ்,சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள்:- யாழ்.ஒளி, K.S.R.PHOTOS இல.05 கனகபுரம் தெரு,கிளிநொச்சி. (6216)

## இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும். பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி. T.P 021-2285750 (சி.11869)


## தவறிவிட்டது

குமுழமுனையைச் சேர்ந்த யோன்பிள்ளையெலைச்சன் என்ப வரது அடையாள அட்டை (இல.8430 41923-V),பயணஅனுமதி அட்டை, மாணவர் அடையாள அட்டை என்பன பூநகரிக்கும், முழங்கா விலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் பூநகரி வருவாய்ப் பகுதியிலோ /முழங் காவில்வருவாய்ப் பகுதியிலோ ஒப் படைக்குமாறு வேண்டிக்கொள் கின்றார். (6221)

## தவறிவிட்டது

பனிச்சங்குளம் மாங்குளத்தில் வசிக்கும் மோ.றியோபேட் என்பவரது அடையாள அட்டை(851813969-V) புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது புலிகளின்குரல் நடுவப்பணியகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன (6218)

## தவறிவிட்டது

வெளிப்புலம் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தசாமி நிஷாந்தன் என்ப வரது அடையாள அட்டை (80042 3511-V),விசேட அடையாளஅட்டை, வேலைத்தளஅட்டை என்பவற்றுடன் பேஸ் ஒன்று கிளிநொச்சிக்கும், 55 ஆம் கட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (6222)

## கண்ணீர் அஞ்சலி

### திரு.போனிப்பாஸ் அந்தோனிப்பிள்ளை (இராசையா – வாத்தியார்))

எமது பாடசாலை உப அதிபர் திருமதி M.R றொபேட் அவர்களின் தந்தையார் திரு.போனிப்பாஸ் அந்தோனிப் பிள்ளை அவர்களின் மறைவையொட்டி-குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(6162)

அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(மு/வற்றாப்பளை ம.வி)

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னை மடியில் 1983 04 06



மண்ணின் மடியில் 2000 05 31

2 ஆம் லெப்.குழல்வாணி
(அன்ரன் குயன்மேரி)
(குற்சுட்டகுளம்,கனகராயன்குளம்.)

*அலை மூன்றில் பகைவெல்லச்சென்றவளே;*
*நினைவலையாகி எமை விட்டுச் சென்றதேனோ!*
*தினம் விம்மும் உனை எண்ணி நெஞ்சம்;*
*பிஷ்பு உருவாகும்எம் நெஞ்சில்-பகை மீது உன்மம்*
*வடிகின்ற நாளிற்காய் களமாடுவோம்.*
*நாளை உருவாகும் ஈழத்தில்-*
*வெற்றிக் கொடி நாட்டுவோம்.*

இதே நாளில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின் றோம்.

(6220)

தாய்,தந்தை,சகோதரிகள்,
சகோதரர்கள்.

# ஈராக்கில் பல இடங்களில் குண்டு வெடிப்பு

# படையினர், பொதுமக்கள் உட்பட 19 பேர் பலி

(பாக்தாத்)

**ஈராக்கில் இடம்பெற்ற பல்வேறு குண்டு வெடிப்புக்களில் பிரிட்டன் இராணுவ அதிகாரி ஒருவர் உட்படப் பத்தொன்பது பேர் பலியாகியுள்ளனர்; பலர் காயமடைந்துள்ளனர்.**

ஈராக்கின் கிர்குக் நகரிலிருந்து 70 கிலோமீற்றர் தெற்கில் அமைந்துள்ள நகர வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இரண்டு பொதுமக்கள் பலியானதுடன் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்கப் பாதுகாப்பு அலுவலகம் ஒன்றிற்கு அருகேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

அதேவேளை மத்திய பாக்தாத்தில் அமைந்துள்ள கனியவள எண்ணெய் அமைச்சின் முன்பாக இரண்டு குண்டுகள் வெடித்ததில் ஆறு பேர் பலியாகியுள்ளனர்.

மேலும் பாக்தாத் நகரின் மேற்குப் பிரதேசத்தில் பொலிசாருக்கும் ஆயுதக்குழுவிற்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட பதினொரு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு சனவரி முதல் இதுவரை இடம்பெற்ற தாக்குதல்களில் சுமார் 700 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.



**கடந்த வாரம் ஈராக்கின் றமாடியில் கைது செய்யப்பட்ட இரு மதத்தலைவர்களை விடுவிக்கக்கோரி அமெரிக்க இராணுவ வாகனத்திற்கு முன்னால் மக்கள் நடத்தும்ஆர்ப்பாட்டம்.**

## ஐ.ஒன்றிய பொது அரசியலமைப்பு சட்டத்திற்கு பிரான்ஸ் மக்கள் எதிர்ப்பு

(பரிஸ்)

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளுக்குப் பொதுவான அரசியல் அமைப்புச் சட்டம் கொண்டு வருவதை ஏற்பதா? வேண்டாமா? என்பது தொடர்பான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் பிரான்சில் இடம்பெற்றது. வாக்கெடுப்பில் பொதுவான அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்பதில்லையென மக்கள் வாக்களித்துள்ளனர்.

பிரான்சில் நான்கு கோடியே 20 இலட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

சனாதிபதி சிராக் பொது அரசியல் சட்டத்துக்கு ஆதரவாக இருக்கிறார். எதிர்ப்பு வாக்கு பெரும்பான்மையாக இருந்தது அவரது தோல்வியாகக் கருதப்படுகிறது.

## ஈராக்கின் முன்னாள் பிரதமர் சிறையிலிருந்து சர்வதேச சமூகத்திடம் உருக்கமான வேண்டுகோள்

(பாக்தாத்)

சதாம் ஹுசைன் ஈராக்கை ஆட்சி செய்தபோது துணைப் பிரதமராக இருந்த தாரிக்அஜீஸ் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார். அவர் கைபட எழுதி இருக்கும் கடிதத்தில் "நான் ஒரு அப்பாவி என் விடுதலைக்குச் சர்வதேச நாடுகள் உதவவேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சதாம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அஜீஸ் கைது செய்யப்பட்டார். பாக்தாத் அருகே கிராப்பர் முகாமில் இவர் சிறைவைக்கப்பட்டு இருக்கிறார். சதாம் ஹுசைன் மீதும், தாரிக் அஜீஸ் உட்பட அவரது மந்திரிகள் 11 பேர்மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. போர்க்காலக் குற்றங்களுக்காகவும், அத்துமீறல்களுக்காகவும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அவர் சர்வதேசத்திடம் கடிதம் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது; சட்டத்திற்குப் புறம்பாக நான் கைது செய்யப்பட்டுள்ளேன்.அநீதியாக என் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய திகதிவரை முறையான விசாரணை தொடங்கவில்லை.

என்னுடைய கஷ்ர நிலையை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச நாடுகள் உதவவேண்டும்.

சர்வதேச சட்டத்துக்கும், ஜெனீவா தீர்மானத்துக்கும், ஈராக் சட்டத்துக்கும் முரணாக நான் கைது செய்யப்பட்டிருக்கிறேன். எனவே உலக நாடுகள் தலையிடுவது தவிர்க்க முடியாதது ஆகும் எனக் கூறி இருக்கிறார். இன்னொரு கடிதத்தில், நானும் என் சகாக்களும் வெளி உலகத்துடன் துண்டிக்கப்பட்டு இருக்கிறோம் என்றும், எங்கள் குடும்பத்தின் அனுப்பும் கடிதங்களையும், பார்சல்களையும் நாங்கள் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

வக்கீல் நாளேட்டில் இந்தக் கடிதங்களை அவர் எழுதி இருக்கிறார். இந்தக் கடிதங்கள் ஆங்கிலத்திலும், அரபுமொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

## தலைக்கு ரூ.125 கோடி பரிசு அறிவிப்பு தீவிரவாதி ஜர்க்காவி ஈராக்கை விட்டு ஓட்டம்

(பாக்தாத்)

தலைக்கு 125 கோடி ரூபாய் பரிசு அறிவிக்கப்பட்ட தீவிரவாதி ஜர்க்காவி அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்ததாகவும், இதனால் அவர் ஈராக்கை விட்டு ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் நாட்டிலுள்ள அல்ஹைய்தா இயக்கத்தின் தலைவர் அல் ஜர்க்காவி இவர் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராகத் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகிறார். இவரை உயிருடனோ, பிணமாகவோ பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 125 கோடி ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. ஜர்க்காவி மட்டும் இல்லாவிட்டால் ஈராக் போர் என்றோ முடிவுக்கு வந்திருக்கும் என்று நம்பப்படுகிறது. அவரைக் கொல்வதற்காக அவர் தங்கியிருக்கும் இடங்களின் மீது எல்லாம் அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தி வந்தது.

தாக்குதல்களில் தப்பித்து வந்த ஜர்க்காவி மூன்று வாரங்களுக்கு முன்பு நடந்த ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்தார். "அல் காயம் என்ற நகரின் அருகே ஜர்க்காவி ஒரு காரில் சென்றபோது அமெரிக்க ஏவுகணை அவரைத் தாக்கியது. வலது தோளுக்கும். நெஞ்சுக்கும் இடையே ஏவுகணைத்துகள் பாய்ந்தது. அது அங்கேயே தங்கிவிட்டது. இன்னொரு துகள் ஜர்க்காவியின் மார்பைத் துளைத்து முதுகு வழியாக வெளியே வந்தது.

ஜர்க்காவி காயமடைந்ததும் அவரது வாகனத்தில் இருந்த ஆதரவாளர்கள் அவரைத் துக்கிச் சென்றுவிட்டனர். மறைவிடத்தில் வைத்து அவருக்கு முதலுதவிச் சிகிச்சையளித்தனர். நான்கு நாட்களுக்குப் பிறகு காய்ச்சல் ஏற்பட்டதால் ரமடி நகரிலுள்ள ஒரு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்ததும் அன்றைய தினமே அவரது ஆதரவாளர்கள் அவரைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டனர்.


ஏவுகணைத்துகளை உடலில் இருந்து வெளியே எடுப்பதற்காக அவருக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். அதை ஈராக்கில் வைத்துச் செய்தால் அமெரிக்க இராணுவம் பிடித்துவிடும் என்பதால் அவர் வேறு நாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டார் அவர் ஈரான் நாட்டுக்குச் சென்றுவிட்டார் என்று லண்டனில் இருந்து வெளிவரும் 'திசண்டே டைம்'' கூறியுள்ளது.

இதேவேளை எங்கள் தலைவர் நல்ல ஆரோக்கியத்துடன்தான் இருக்கிறார். அவர்தான் அமெரிக்க இராணுவத்துக்கு எதிரான புனிதப் போரை நடத்தி வருகிறார். தாக்குதல் நடவடிக்கைகளை இந்த நிமிடம் வரை அவர்தான் மேற்பார்வையிடுகிறார் என்று ஜர்க்காவி ஆதரவாளர்கள் கூறியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அல் ஹைய்தா வெளியிட்ட அறிக்கையில், "கடவுளின் பாதையில் நடைபோட்டு வரும் நேரத்தில் ஜர்க்காவி காயமடைந்தார். அவர் குணம் அடைய கடவுளை பிரார்த்தனை செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளது."

எங்கே எப்போது எப்படி ஜர்க்காவி காயமடைந்தா என்பது அல்ஹைய்தா அறிக்கையில் கூறப்படவில்லை.

கடந்த வியாழக்கிழமை அல் ஹைய்தா இணையதள அறிக்கையில் ஜர்க்காவி செய்து வந்த பணிகளைக் கவனிப்பதற்கு புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்பட்டிருந்தது. பிறகு வந்த அறிக்கை அதை மறுத்தது.



**அவுஸ்திரேலியாவில் என்றுமில்லாதவாறு ஏற்பட்டுள்ள வறட்சியினால் சிட்னியில் குளங்கள் வற்றிக் காரணப் படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவ அவுஸ்திரேலிய அரசு சர்வதேச சமூகத்திடம் 191 மில்லியன் டொலர் உதவி கோரியுள்ளது.**

## 400 பலஸ்தீனக் கைதியை விடுவிக்க இஸ்ரேலிய அமைச்சரவை அனுமதி

(டெல்அவிவ்)

இஸ்ரேலிய அமைச்சரவை 400 பலஸ்தீனக்கைதிகளை விடுதலை செய்வதற்கு அனுமதியளித்துள்ளது.இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷரோன் பலஸ்தீன சனாதிபதி மகமுத் அப்பாஸ் உடன் கடந்த பெப்ரவரியில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாகவே பாலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள்.இருதரப்பு போர்நிறுத்தத்திற்கு வழிவகுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து இஸ்ரேலில் சிறைவைக்கப்பட்டிருந்த பலஸ்தீனக் கைதிகள் 500 பேர் விடுதலை செய்யப்பட்டமை நினைவு கூரத்தக்கதாகும் இஸ்ரேலியப் பிரதமரின் தற்போதைய முயற்சி சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தை பெறுவதற்கும் எனத் தெரிகின்றது. அவர் சமாதானமுயற்சிகளை குறைத்து மதிப்பிடுகின்றார் என பலஸ்தீனம் சாடுகின்றது.

## காசா அகதிமுகாம் மீது இஸ்ரேல் ஏவுகணைத்தாக்குதல்; இருவர் பலி

(ஜெருசலேம்)

காசா நகரின் வடக்குப்பகுதியிலுள்ள ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் விமானப்படை விமானம் நேற்று முன்தினம் ஏவுகணைகளை வீசி திடீர்த் தாக்குதல் நடத்தியது.

மொத்தம் மூன்று ஏவுகணைகள் வீசப்பட்டது. இதில் முகாம் தீப்பற்றி எரிந்தது. இரண்டு பேர் பலியானதாகத் தகவல்கள் கூறுகின்றன. தொடர்ந்து காசா நகரைச் சூழ கடற்படை மற்றும் இராணுவப்படைகளை இஸ்ரேல் நிறுத்தி இருக்கிறது. காசா நகரில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளைத் தாக்கப் போவதாக இஸ்ரேல் அறிவித்திருக்கிறது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

## வீதியில் குப்பை போட்டால் மூவாயிரம் ரூபா அபராதம்

இங்கிலாந்தில் பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் குப்பை போட்டாலோ, அண்டை வீட்டுக்காரங்களுக்குத் தொல்லை கொடுத்தாலோ அவர்களுக்கு மூவாயிம்ரூபாய் அபராதம் விதிக்கும் திட்டம் அடுத்த மாதம் (ஜூன்) முதல் நடைமுறைக்கு வருகிறது.

"தெருக்களில் குப்பைபோடும் சிறுவர்களை அவர்களின் வீட்டுக்கு அழைத்துச் சென்று அவர்கள் பெற்றோர் முன்னிலையில் அபராதக் கடிதத்தைக் கொடுப்போம்'' என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

## ஜேர்மன் சஞ்சிகைத் தகவலை மறுக்கிறார் முஷாரப்

ஈரான் தொடர்பாக ஜேர்மன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தான் கூறியதாக வெளியான சில கருத்துக்களைப் பாகிஸ்தான் சனாதிபதி ஜெனரல் பர்வேஷ்முஷாரப் நிராகரித்துள்ளார்,ஈரான் அணுகுண்டைச் சொந்தமாக்கிக்கொள்ள மிகவும் ஆசைப்படுகின்றது என்று அவர் கூறியதாக ஜேர்மன் சஞ்சிகை தெரிவித்திருந்தது. இதனையே அவர் மறுத்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் கூறிய கருத்துக்கள் தவறான முறையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக அதிபரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜேர்மன் சஞ்சிகையில் வெளியான கருத்துக்கள் ஈரானை மிகவும் ஆத்திரதிற்குள்ளாக்கியுள்ளது. எவ்வாறேனும் ஈரானின் அணுசக்தித் திட்டத்திற்கும், பாகிஸ்தானுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

# உயிரற்றுப் போகும் சமாதான காலத்தில்

# உயிர்ப்புறும் போராட்டத்தை முன்னெடுப்போம்

## -வீரமுரசு எழுச்சி நிகழ்வில் தளபதி-அமிர்தாப்

(அலுவலகசெய்தியாளர்)

**உயிரற்றுப் போகும் சமாதான காலத்தில் உயிர் பெற்று வரும் போராட்டத்தை முன்னெடுப்போம். கடந்த மூன்று வருடங்களின் முன் சிந்திய குருதியும், கொடுத்த விலையும் போராளிகளான எங்களுக்கும், மக்களாகிய உங்களுக்கும் மட்டுமே தெரியும். இவ்வாறு நேற்று முன்தினம் கிளி. பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்ற வீரமுரசு நிகழ்வில் கலந்து கொண்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமீர்தாப் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஓயாத அலைகள் 2,3 காலத்தில் 1460 நாட்கள் தொடர்ந்து போராடினோம். நாங்கள் கொடுத்த விலைகள் வேறெந்த நாடுகளும் கொடுத்திருக்க முடியாது. உங்களது ஒவ்வொரு உறவு களின் இறுதி மூச்சிலும் உரைத்தது "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" என்பதே.


நாம் சிங்களப் படை போன்று சம்பளத்திற்காக போராடுபவர்கள் அல்லர். எமது மக்கள் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழத் தனியரசுக்காக போராடிவரும் ஓர் விடுதலை இயக்கமாகும். ஜெயசிக்குறு நடவடிக்கையை ஆறு நாட்களில் நீங்களும், நாங்களும் வென்றோம். யாழ்ப்பாணத்தின் இதயமான ஆனையிறவை மீட்கலாம் என் பகல் கனவுடன் வந்த எதிரியின் தீச்சுவாலை நடவடிக்கையை 72 மணித்தியாலயங்ளகளில் வெற்றி கொண்டு முறியடித்த வீரம் உங்களில் இருந்து பிறந்தவை. இன்றும் கிழக்கில் சிங்கள புலனாய்வுத் துறையினரால் நடாத்தி வரும் நிழல் யுத்தம் தொடர்கின்றது. உயிரற்றுப் போய்க் கொண்டிருக்கும் இந்த மூன்று வருட சமாதானத்தில் இருந்து மீண்டும் உயிர் பெற்று வரும் போராட்டத்தை முன்னெடுத்து நாம் யாரென்பதை எதிரிக்குக் காட்டுவதற்கு தயாராக நின்ற எமது தேசத் தலைவருக்கு கை கொடுப்போம் எனத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 5.00 மணிக்கு பாரதிபுரம் வித்தியாலயத்தில் ஆரம்பமான வீரமுரசு நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பாரதிபுரம் ஆலடிச்சந்தியிலிருந்து மாவீரரின் பெற்றோர்கள் மலர் தூவி ஊர்வலமாக அழைத்து வரப் பட்டு பாடசாலை வளாகத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் வைக் கப்பட்டிருந்த மாவீரர்களது திருவுருவப் படங்களுக்கு அவர்களது பெற் றோர், உறவினர்களால் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினர். கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் பொதுச் சுடரினை பாரதிபுரம் வித்தியாலய அதிபர் இராசேந் திரம், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை, கிளி. மாவட்ட ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகள் இடம் பெற்றது. கருத்துரைகளை பாரதிபுரம் வித்தியாலய அதிபர் இராசேந்திரம், கிளி. பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் நேசன், வெகுசன ஒன்றியத்தைச் சேர்ந்த வேளமாலிகிதன், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் ஆகியோர் நிகழ்த்தினர்.

குமா சிறுவர் பூங்கா மாலை நேர வகுப்பு மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடனங்களுடன் பேபி ஆசிரியையின் நெறியாள் கையில் சங்கநாதம், உணர்வுகள் நாடகம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)





(படங்கள்: சோதி)

## சமாதான அபிவிருத்தியும் விழிப்புணர்வும்- பயிற்சிவகுப்பு

(வட்டக்கச்சி)

சமாதான அபிவிருத்தியும், விழிப்புணர்வு பற்றிய மூன்று நாள் பயிற்சி வகுப்பு கடந்த 18ஆம் திகதி பன்னங்கண்டிப் பகுதியில் இடம்பெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் மங்கல விளக்கினை தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் கணேசலிங்கமும் தேசியக் கொடியினை கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவன செயலாளர் குமாரசாமியும் தமிழர் புனர்வாழ்வுக் கொடியினை கிளி. கிழக்கு புனர்வாழ்வு இணைப்பாளர் சிறிரஞ்சனியும், கிளி. கிழக்கு புனர்வாழ்வுக்கொடியினை கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவன பொருளாளர் ராசேந்திரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இப்பயிற்சி வகுப்பில் 40ற்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்கு கொண்டு சமாதான அபிவிருத்தியும், விழிப்புணர்வு பற்றியவிளக்கங்களையும் அறிந்து கொண்டனர். (12)



நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் கிளி.மாவட்ட வைத்தியசாலை நோயாளர் விடுதிக்கு நீர் விநியோகம் செய்வதற்காக 50.000 ரூபாவிற்கு மேல் பெறுமதியான பொருட்கள் அண்மையில் திட்ட இணைப்பாளர் மு.குணரெட்ணத்தால் வழங்கிவைக்கப்பட்டது. (படம்:குகன்)

## போர் நிறுத்த மீறல்களை கட்டுப்படுத்த படைத்தரப்பிடம் தீர்க்கமான நடவடிக்கையில்லை!

### –மட்டு அம்பாறை துணை அரசியல் துறைப் பொறுப்பாளர்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் எமது தலைமைப்பீடத்தைச் சந்திப்பதற்காக வன்னிக்குச் சென்றுள்ளனர். அதனாலேயே படைத்தரப்பினருடனான சந்திப்பிற்குச் செல்ல முடியவில்லை.அவர்கள் வந்ததும் இங்கு நடைபெறுகின்ற வன்முறைகள் மற்றும் சுனாமி நிவாரணப் பணிகளைச் சீராக மேற்கொள்வதற்குப் படைத்தரப்பும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துப்படைத்தரப்பினருடன் ஒரு சந்திப்பை மேற்கொள்வதற்கு நாங்கள் உத்தேசித்திருக்கின்றோம் என மட்டு-அம்பாறை மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய போட்டியில் தெரிவித்தார்

படைத்தரப்பினருடனான சந்திப்புக்களில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதில்லையென படைத்தரப்பினர் கூறுகிறார்களே எனக்கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்;

கடைசிச் சந்திப்பு 2004 நவம்பர் மாதம் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நடைபெறுகின்ற போர் நிறுத்த மீறல்களுக்குப் படையினரும் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் என்கின்ற கருத்துக்களையும் அதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் நாங்கள் முன்வைத்தோம். இதற்கான சரியான, தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் எனவும் படைத்தரப்பிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆனால் இன்னமும் ஒரு தீர்க்கமான நடவடிக்கையும் படைத்தரப்பால் மேற்கொள்ளப்படவில்லை.ஆனால் வன்முறைச் சம்பவங்கள், மட்டு-அம்பாறைப் பகுதிகளில் நடந்த வண்ணமே உள்ளன. இன்றும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற படையினரின் நடவடிக்கைகள் தூண்டுகோலாகவே இருக்கின் றது என்றார்,

படைத்தரப்பினர் வன்முறைச் சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் பங்கிருப்பதாகக் குற்றச்சாட்டை முன்வைக்கிறார்களே எனக் கேட்டபோது,

அவர்கள் அப்படிக் குற்றச்சாட்டை முன்வைத்தாலும் உங்களுக்கே தெரியும் சம்பவங்களைப் பார்க்கின்ற பொழுது எங்களுடைய ஆதரவாளர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் வன்முறைச் சம்பவங்களில் யார் ஈடுபடுகின்றார்கள் என்பது. இது குறித்துப் படைத்தரப்பினருக்குப் பலமுறை சொல்லியிருந்தோம். படையினரின் ஒத்துழைப்பில்லாமல் இப்படியான மாற்று இயக்கங்கள் மற்றும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகள் இருந்துகொண்டு மேற்கொள்கின்ற நடவடிக்கைகளே இதற்குக் காரணம். இதற்குப்படைத்தரப்பு அல்லது படைத்தரப்பினருடன் இணைந்து இயங்குகின்ற பிரிவினரும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் என்றார்.

இது பற்றிப் பேசுவதற்காகக் கூட்டங்கள் நடத்தினால் அதற்குச் சென்று- அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்வதனூடாக இதனைச் சொல்லலாமல்லவா? கடந்த நவம்பர் மாதத்திற்குப் பின்னர் இவ்வாறான சந்திப்புக்களில் கலந்துகொள்ளவில்லையென்றால் கிட்டத்தட்ட ஆறு மாதகாலம் பேசாமல் இருப்பதனால் இந்தப் பரஸ்பர சந்தேகங்கள், அவநம்பிக்கைகள் வளராதா? எனக் கேட்டபோது,

நாங்கள் சொன்ன- எங்களால் எடுத்துக் கூறப்பட்ட விடயங்கள் எவற்றிலாவது ஒன்றிற்குப்படையினர் முடிவெடுத்து இந்த வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு படைத்தரப்பினர் மேற்கொள்ளாத விடத்து நாங்கள் அந்தச் சந்திப்புக்களைத் தற்காலிகமாகப் புறக்கணித்தோமே ஒழிய முற்று முழுதாக இந்தச் சந்திப்புக்களைப் புறக்கணிக்க வேண்டும் என்றல்ல என்றார் தயா மோகன்.

## திருமலையில் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கம் 37 மில்லியன் உதவி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 1000 குடும்பங்களுக்கு ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கம் 37 மில்லியன் ரூபா செலவில் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளது. இத் [illegible]வலை திருகோணமலை மாவட்டத் தி[illegible] இரண்டு நாள் விஜயத்தினை [illegible]கொண்ட ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ரடதெரு கோனே தெரிவித்துள்ளார். இதே வேளை ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கம் திருகோணமலை மாவட்டத்தில் 27 மில்லியன் ரூபா செலவிலான சுகாதார மருத்துவ மேம்பாட்டுத் திட்டங்களையும் மேற் கொள்ளவுள்ளது.சனிக்கிழமை மாலை கந்தளாய் அரசினர் மருத்துவ மனைக்கு விஜயம் செய்த இவர் இந்த மருத்துவமனையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ளும் எனவும் உறுதியளித்திருக்கின்றார்.

கந்தளாய் மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ள விருக்கின்ற வேலைத் திட்டங்கள் பற்றியும் வைத்திய அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

## ஓமந்தை சோதனைச் சாவடியில் இராணுவ புலனாய்வுத்துறை கெடுபிடி

(மல்லாவி)

ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன.

கடந்த 27 ஆம் திகதி ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடி ஊடாக பயணித்த பயணிகளை இராணுவப் புலனாய்வுத்துறையினர் விசாரணை செய்தனர். தொடர்ந்தும் இவ்வாறான போக்கு காணப்படுகிறது. வன்னியிலிருந்து வெளியே செல்லும் இளம் யுவதிகளை கடுமையாக விசாரித்து கெடுபிடிகளை மேற்கொள்வதால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (24)

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடு துரிதமாக கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்

## நிறுவனங்களை அர்ப்பணிப்புடன் செயற்படக்கோருகிறார் யாழ்.அரசஅதிபர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடமைப்புத்திட்டங்களை துரிதமாக மேற்கொள்ளவேண்டிய தேவைகள் இருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ்தெரிவித்துள்ளார்.**

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சுமார் 5000 வீடுகள் அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

இவ்வீடுகள்யாவும் மீண்டும் அனர்த்தங்களால் பாதிக்கப்படாத பகுதிகளில் உறுதியான கட்டடப் பொருட்களினால் இவை அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளன.

இத்தகைய வீடுகள் யாவும் எதிர்வரும் மாரிகாலத்துக்கு முன்னர் அமைத்து முடிக்கப்பட வேண்டிய அவசியமுள்ளது.

மாரிகாலத்துக்கு முன்னர் சுனாமியால் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு ஏற்ற விதத்தில் இந்நிரந்தர வீடமைப்புத்திட்டங்கள் துரிதப் படுத்தப்பட்டாலேயே மக்கள் பூரண பயனடைய முடியும் இதற்கு வீடமைப்புத்திட்டங்களை முன்னெடுக்கும் அரசமற்றும்அரச சார்பற்ற நிறுவனங்களின் அர்ப்பணிப்புகள் அவசியம் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (33)

# கல்வி விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை யாழ்.இல் மேற்கொள்ள நடவடிக்கை

## –யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணத்தில் கல்வியை இடை நிறுத்தியுள்ள கற்கும் வயதுடையோரை மீளக் கற்றல் செயற்பாடுகளில் இணைத்துக் கொள்வதற்கான பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

வறுமை காரணமாக மாணவர்கள் ஏராளமானவர்கள் தம் கல்வியை இடை நிறுத்தி வருகின்றனர். இதற்கு பின்தங்கிய பிரதேசங்களில் கல்வியின் அவசியம் குறித்த விழிப்புணர்வு இன்மையே காரணம்.

இதனைக் கவனத்திற்கொண்டு கிராமிய மக்கள் மட்டத்தில் கல்வி விழிப்புணர்வுப் பிரசாரங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இக் கல்வி விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் அடிமட்ட மக்களையும் விரைவில் சென்றடையக் கூடிய விதத்தில் நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ள யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் இக் கல்வி விழிப்புணர்வுத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆதரவு வழங்கவுள்ளதாகவும், தெரிவித்துள்ளார். (33)

# இருதய நோய்ச்சிகிச்சை நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லை

## நோயாளர் கொழும்பு செல்ல வேண்டிய அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கென இது வரையில் இருதய நோய் சிகிச்சை நிபுணர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என இவ் வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வட பகுதியில், குறிப்பாக யாழ் குடாநாட்டில் இருதய நோய் பாதிப்புகளுக்கு இலக்காவோர் தொகை அதிகரித்திருப்பதால் யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய நோய் சிறப்பு வைத்திய நிபுணர் மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை சிறப்பு வைத்திய நிபுணர் ஆகியோரது சேவைகளை விஸ்தரிப்பது அவசியம்.

எனினும் இவ் இருதய நோய்களுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய சிறப்பு வைத்திய நிபுணர்கள் எவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கென நியமிக்கப்படவில்லை. இதனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு வரும் இருதய நோயாளர்களைக் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கே மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (33)

# நோயாளர் காவு வண்டிகளுக்கு சாரதிகள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள பிராந்திய அரசினர் வைத்தியசாலைகளின் அவசர வைத்திய சேவை நோயாளர் காவுவண்டிகளுக்கு சாரதிகள் பற்றாக்குறை நிலவிவருவதாக பிரதிமாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் 36 பிராந்திய அரசினர் வைத்தியசாலைகள் உள்ளன. இவற்றின் அவசர வைத்திய சேவைகளுக்கென நோயாளர் காவு வண்டிகள் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனையினால் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் இவ்வாறு உள்ள நோயாளர் காவுவண்டிகளின் எண்ணிக்கைகளுக்கேற்ப சாரதிகளின் எண்ணிக்கை பற்றாக்குறை நிலவி வருகிறது இதன் காரணமாக இந் நோயாளர் காவு வண்டிகள் மூலமான அவசர வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# மின் விநியோகம் இல்லை யாழ்.சூரிய வெளி மக்கள் பாதிப்பு

## - அரச அதிபரிடமும் முறையீடு

(யாழ்ப்பாணம்)


யாழ்.நாவாந்துறையிலுள்ள சூரியவெளிக் கிராமத்திற்கு மின்சார வசதிகளைப் பெற்றுத்தர நடவடிக்கைகளை எடுக்குமாறு இக் கிராம மக்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேசிடம் நேரடியாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி சூரிய வெளிக் கிராமத்திற்கு இதுவரையில் மின்சார விநியோகங்கள் இடம்பெறவில்லை. இதனால் இக்கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள் கின்றனர்.

இச்சூரியவெளிக் கிராமம் யாழ். மாநகரசபை எல்லைக்குட் பட்டதாகக் காணப்படுகின்ற போதும், அதன் வளர்ச்சிபின்தங்கிய நிலையிலேயேயுள்ளது.

குறிப்பாக இம் மின்சார வசதி இன்மை இப்பிரதேச வாழ்.கல்விச் சமூகத்தினது கல்வி நடவடிக்கைகளைப் பாதித்திருப்பதாகச் சுட்டிக் காட்டியே மக்கள் யாழ். அரச அதிபரிடம் இக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (33)

# சாவகச்சேரி கெருடாவில் வடக்கில் கைவிடப்பட்ட நிலையில் சரஸ்வதி மகாவித்தியாலயம்




படம்:கா.சுரேன்

கைவிடப்பட்ட நிலையில் சாவகச்சேரி கெருடாவில் வடக்கு சரஸ்வதி மகாவித்தியாலயம் உள்ளது. இப்பாடசாலை சூரியகதிர் -02 நடவடிக்கையின் பின் இயங்காமலேயே இருந்தது. இப்பொழுது அதைத் திருத்தி அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது தொண்டர் நிறுவனங்களோ முன்வராமையால் இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பிரதேசத்தில் இருந்து மாணவர்கள் அயல் பாடசாலைகளுக்கு மிகவும் நெருக்கடியான நிலையில் போய் வருகின்றனர் போக்கு வரத்து இன்மையால் இப்பிரதேசத்தில் மாணவர்கள் கற்றல் செயற் பாடுகளுக்கு மிகவும் கஸ்ர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தின் மாணவர்களின் நன்மை கருதி யாராவது இப்பாடசாலையை திறக்க முன்வருவார்களா? என்று அப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

# இன்றைய அரசியல் சூழல் குறித்து தென்மராட்சியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(நல்லூர்)

தென்மராட்சிப் பகுதியில் அரசியல் துறையினரால் கிராம தரிசிப்பும் இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டபட்டு வருகின்றன.

தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் பொ.ஈஸ்வரனின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் இக்கலந்துரையாடலில் மக்கள் இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான கருத்துக்களை கேட்டறிந்ததுடன் தமது கருத்துக்களையும் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இக்கலந்துரையாடலில் அதிகமான மக்கள் கலந்துகொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனைத் தொடர்ந்து அரசியல் நிலைப் பாடுகள் சம்பந்தமான கருத்துப்படக்காட்சிகளும் இடம் பெற்று வருகின்றன. (41)

# நொராட் திட்டத்தின் கீழ் 9 குளங்கள் யாழ்.நல்லூர் பகுதியில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 9 குளங்கள் "நொராட்" திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் உள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் நிலத்தடி நீரின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் அதனை அண்டியுள்ள கிராமங்களின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அந்த வகையில் நீர் நொச்சிக் குளம், பிராமணக்கட்டுக்குளம் நாச்சிமார் கோவிலடிக்குளம், வண்ணார் பண்ணைக்குளம், நரியன் குன்றுக்குளம், நாயன்மார்க் கட்டுக் குளம் பண்டாரக்குளம், பிரம்பன் குளம் வீரமாகாளி அம்மன் கோவிலடிக்குளம் என்பவையே இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி தெய்வேந்திரம் தெரிவித்தார். (33)

# பொறிந்து விழும் நிலையில் பண்ணைப்பாலம்

யாழ்ப்பாணம் -தீவகத்துக்கிடையிலான பிரதான வீதியிலுள்ள பண்ணைப்பாலம் எந்நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

கடந்த கால இராணுவ அக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் சேதமாக்கப்பட்ட இப்பாலம் தற்காலிகமாக அமைக்கப்பட்டே அதனூடான போக்குவரத்துக்கள் இதுவரைகாலமும் இடம் பெற்று வந்தன.

எனினும் இத்தற்காலிக பாலம் தற்பொழுது பொறிந்து விழக்கூடிய நிலையில் இருக்கின்றது. இதன்காரணமாக இப்பாலத் தினூடான பயணத்தை தவிர்த்துக் கொள்ளுமாறு கனரக வாகனச்சாரதி களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளதுடன் பொதுமக்கள் தமது பிரயாணங்களை மிக அவதானத்துடன் மேற்கொள்ளுமாறும் அறிவிக் கப்பட்டுள்ளது. (33)

# கெற்பலி, கேடீஸ் நகர்பகுதியில் தொடரும் திருட்டுக்கள்

கெற்பலி, கேடீஸ்நகர், தரவை போன்ற பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்று வரும் ஆடு, மாடு கோழிகள் திருட்டுக்களால் பொது மக்கள் இரவுகளில் விழித்திருந்து இவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருப்பதாக இப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு மதங்களுக்கு மேலாக இப் பகுதிகளில் தொடர்ந்து திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்த பொது மககள் விழிப்புடன் இருக்கும் படியும் கிராம அபிவிருத்தி குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன (28)

# பீகாரில் மீண்டும் தேர்தல்! பா.ஜ.கவின் நிலை...?

இந்திய அரசியலில் இதுவரை நடக்காத சமாச்சாரம் ஒன்று அரங்கேறி இருக்கின்றது. பீகாரில் தேர்தலின் பின்னர் சட்ட சபை அமைக்காமலேயே சட்ட சபைக் கலைப்பு நடந்துள்ளது. இந்திய அரசியலில் இதுவரை இவ்வாறு நடந்தமைக்கான சான்றுகள் தெரியவில்லை. பீகாரில் முதன் முறையாக அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.



பீகார் மீண்டும் தேர்தல் களை கட்டவுள்ளது. பிரச்சாரம் புழுதியினால் மூடப்பட இருக்கிறது. மக்கள் மீண்டும் தமது வாக்குகளை செலுத்த மழையோ, வெயிலோ தாங்கிக் கொண்டு வரிசைகளில் நிற்கப் போகும் அவலமும் நடக்கத்தான் உள்ளது.

தேர்தல் ஆணையகம் எதிர்வரும் நவம்பரில் தேர்தலை நடத்த முடிவு செய்திருக்கின்றது. அதுவும் ஒரே நாளில் முழு இடமும் வாக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவித்திருப்பது மட்டும் தான் ஓரளவு ஆறுதலடையக் கூடிய விடயமாகும்.

பீகார் சட்ட சபையினைக் கலைப்பதற்கு பாரதீய ஜனதாக் கூட்டணி ஒரு வீதம் கூட ஒத்துழைக்கவில்லை. பீகாரில் கதவடைப்பு, ஆர்ப்பாட்டம், தீவைப்பு எனப் பல வழிகளிலும், எதிர்ப்புக்கணைகள் வீசிக் கொண்டு தான் இருக்கின்றன.



ஆனால் மத்தியரசு பீகார் சட்ட சபையினை எதிர்க்கட்சிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துணிகரமாக கலைத்திருக்கின்றது.

பாரதீய ஜனதாக் கூட்டணி பீகாரில் ஆட்சியமைப்பதற்காக சட்ட சபை உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்குகின்றது. அதனால் தான் கலைக்கப்பட்டதாக மத்தியரசு தனது பக்கத்தை கூறியிருக்கின்றது.

அதே நேரம் வெறும் பதவியையே குறியாகக் கொண்டு சட்ட மன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவது இழிவான செயல் என்று பிரதமர் மன்மோகன்சிங், வாஜ்பாய், அத்வானிக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றமையும் சலசலப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.

கடந்த மார்ச் மாதம் வட மாநிலங்கள் சட்ட சபைத் தேர்தலை எதிர்கொண்டன. ரியானா, ஜார்க்கண்ட் காங்கிரஸ் மானது. ஆனால் பீகாரில் மட்டும் தேர்தல் கட்சிகளையும் ஆளும் கட்சியையும் விட்டது என்று தான் கூற வேண்டும்.

பீகாரில் மட்டும் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறவில்லை. இதற்கு பீகாரில் ஒன்று பட்டு வாக்கு வங்கியினை நிரப்ப வேண்டிய கட்சிகளெல்லாம் சிதறுண்டு, தனித்தனியாகிப் போனமையே பிரதான வலுவான காரணமாகும்.

இந்த வகையில் தான் கடந்த மக்களவையில் ஒன்றுபட்டு நின்ற காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி, மார்க்சிய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் என்பன பீகார் சட்ட சபைத் தேர்தலில் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதை மறந்தன. தனித் தனியாக களமிறங்கின. வாக்குகளை சின்னா பின்னமாக்கியும் கொண்டன.

இதில் அதிசயம் என்னவெனில் மத்தியில் மக்களவைத் தேர்தல் மூலம் ஒன்றுபட்டு நிற்கும் லல்லு பிரசாத்யாதேவ் (ராஷ்டிரிய ஜனதா தளம்) ராம்விலாஸ் பஸ்வான் (லோக் ஜனசக்தி) இருவரும் மாநிலத்தில் காங்கிரசுடன் கைகோர்க்க மறுத்தமை தான்!

ஏன் மறுத்தனர்? எனில் மாநிலத்தில் லல்லுப் பிரசாத் யாதேவும் ராம்விலாஸ் பஸ்வானும் ஒருவர் குடுமியை மற்றவர் பிடித்து மோதிக் கொண்டிருப்பதே இதற்கு ஆதாரம்! இதனால் தான் லல்லு இருக்கும் கூட்டணியில் நான் இருக்க மாட்டேன் என்று பஸ்வான் சூளுரைத்தார். பஸ்வான் இருக்கும் கூட்டணியில் நான் இருக்கப் போவதில்லை என்று லல்லு சபதமிட்டார்.

இதனால் மக்களவையில் தேனும், பாலுமாக காங்கிரசுடன் ஒட்டி இருந்த லல்லுவும், பஸ்வானும், பீகார் சட்ட மன்றத் தேர்தலில் எதிர் எதிர் துருவங்களாக மாறியமையே பெரும் களேபரமாக பீகாரை யாக்கியது எனலாம்.

பீகார் சட்டமன்ற முடிவுகள் எவருக்கும் சாதகமாக அமையவில்லை. லல்லுப் பிரசாத் யாதேவ் 75 இடங்களை மட்டுமே தக்க வைத்துக் கொண்டமையும், பாரதீய ஜனதா கூட்டணி 91இடங்களையும், பஸ்வான் 29 இடங்களையும் பெற்றமையும் பழைய தெரிந்த விடயங்கள்!

இப்பொழுது சட்ட சபைக் கலைப்பிற்கு பஸ்வானே பிரதானமானவராகக் கருதப்படுகின்றது. ஏனெனில் பஸ்வான் தனது 29 சட்டமன்ற உறுப்பினர்களையும், மிகப் பெரிய பலமாகக் கருதிக் கொண்டார். பாரதீய ஜனதாவுடனோ அல்லது ராஷ்டிரிய ஜனதா தளத்துடனோ கூட்டணி சேர மிகப் பெரிய பெரிய நிபந்தனைகளையெல்லாம் விதித்தார்.

இதனால் எந்தக் கட்சியாலும், பெரும்பான்மை பெறமுடியவில்லை. சட்ட சபையில் முதல்வர் பதவி வெற்றிடமானது சனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது.

இப்பொழுது மீண்டும் பீகார் சட்ட சபைத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றது. அதே போல் கடந்த சட்ட சபைத் தேர்தல் போலன்றி இம் முறையும் கூட்டணிகள் இடம் மாறலாம் பிரிந்தவை கூடலாம் என்றெல்லாம் எதிர்வுகள் கிளம்பியுள்ளன.

இதனடிப்படையில், பீகாரை தம் வசப்படுத்திக் கொள்ள காங்கிரஸ் புதிய வியூகங்களில் இறங்கியிருப்பதாகப் பரவலாக பேசப்படுகின்றது. இதனை உண்மையாக்குவது போன்றே காங்கிரஸ் பீகாரில் எந்தக் கட்சியுடனும், கூட்டணியில்லை என்று அறிவித்திருக்கின்றது. ஆனால் லல்லுப் பிரசாத் யாதேவ், ராம்விலாஸ் பஸ்வான் இருவரும் எம்முடன் கைகோர்க்கலாம் அவர்களுக்காக எமது கதவுகள் திறந்தே தான் இருக்கின்றது என்று இலை மறை காயாக அழைப்பும் விடப்பட்டிருக்கின்றது.


இதனை (ராஷ்டிரிய) ஜனதா தளம் லல்லுப் பிரசாத் யாதேவ் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள பின்நிற்கவில்லை போலுள்ளது. கடந்த சட்ட சபைத் தேர்தலில் கூட்டணியமைப்பதில் நல்ல பாடம் கிடைத்துள்ளது. இம்முறையும் நான் தவறு செய்து விடமாட்டேன் என்று காங்கிரசுடன் கைகோர்க்க சமிக்ஞை காட்டியுள்ளார்.

ஏனெனில் கடந்த சட்ட சபைத் தேர்தலில் தனித்து நின்று மூக்குடைபட்டுக் கொண்டமையினை லல்லு உணர்ந்து கொண்டுள்ளார்.

அது மட்டுமன்றி எதிர்க் கட்சிகள் லல்லுப் பிரசாத்தை புகையிரத அமைச்சர் பதவியிலிருந்து தூக்குவதற்கு எத்தனங்கள் செய்த போதும் மத்தியரசு அதற்கு மௌனம் காத்ததுடன் லல்லுவை பதவி விலகுமாறு இதுவரையும் கேட்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. எனவே மத்தியரசிற்கு நன்றிக்கடன் போலவே மீண்டும் மாநிலத்தில் காங்கிரசுடன் தோழமைக்குப் பச்சைக் கொடி காட்ட லல்லு தவறமாட்டார் என நம்பலாம்.

அடுத்து ராம்விலாஸ் பஸ்வான் (லோக் ஜனசக்தி) ஏற்கனவே நொந்து நூலாகியுள்ளார். அவருடைய கட்சியைச்சேர்ந்த 19 சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே கட்சியை விட்டுவிலகிப் பாரதீய ஜனதா கூட்டணிக்கு தாவி விட்டிருக்கின்றார்கள்.

எனவே இருக்கும் மிச்சம் மீதி 10 பேரும் தன்னை விட்டு ஓடாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே பஸ்வான் மீண்டும் காங்கிரசிடம் சரணடைந்து விட்டார் என்று கூட சொல்ல முடியும்.இல்லையேல்





பீகாரில் லல்லுப் பிரசாத் ஆட்சியமைக்க பஸ்வான் கூட்டணி சேர வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி அழைப்புவிட்டபோது பஸ்வான் நாண் பூட்டிய வில்லாக மறுப்பு காட்டியவர். காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி சமரசப் பேச்சு நடத்திய போது கூட வளைந்து கொடுக்க முரண்டு பிடித்தவர்.

இன்றோ 29 சட்டமன்ற உறுப்பினர்களில் 19 பேர் காலை வாரிவிடவும், இருக்கும் பத்துப் பேருடன் காங்கிரசுடன் , ராஷ்டிரிய ஜனதா தளத்துடன் கூட்டணியமைக்க தயார் என்று பீகார் மாநில காங்கிரஸ் பொறுப்பாளருடனும் அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலருடனும் ஓடி ஓடி கூட்டணிக்கு அத்தி வார மிடுகின்றார் என்றால் சும்மாவா...

எனவே நடந்து முடிந்த பீகார் சட்டசபைத் தேர்தல் பலருக்கும் பல விதமான பாடங்களை புகட்டி இருக்கின்றது என்று தான் நம்பத் தோன்றுகின்றது.

அதாவது ஒரு கை தட்டி ஓசை எழுப்ப முடியாது என்பதை குறிப்பாக லல்லுப் பிரசாத்தும், பஸ்வானும் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். இல்லையேல் கடந்த மார்ச் மாதம் முறுக்கி கொண்டு நின்ற லல்லுவும். பஸ்வானும் இரண்டு மாத காலத்தினுள் ஒரே கூட்டில் வசிக்க புறப்பட்டிருப்பது அதிசயம் தான்.

எனவே இதனால் காங்கிரஸ் கட்சிக்கு தலைவலி தானாகவே விலகி ஓடும் நிலை தான் உருவாகி இருக்கின்றது. ஏனெனில் கடந்த சட்ட மன்றத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க முன்வராத லல்லு இம்முறை கூட்டணிக் கட்சிகளுக்கே பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்




போவதாக தனது உயர புளியமரக் கொப்பை விட்டிறங்கி வந்திருப்பது காங்கிரசிற்கு பெரும் நன்மை பயக்கும் விடயமே!

எனவே கடந்த மக்களவைத் தேர்தல் போன்றே எதிர்வரும் பீகார் சட்ட மன்ற தேர்தலிலும் காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம் (லல்லு), லோக்ஜன சக்தி (பஸ்வான்) மார்க்சிய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட்

அ.கலைவாணி

ஆகிய கட்சிகள் ஒன்றிணைய இருக்கின்றன என்று தான் நம்பிக்கை எதிரொலிக்கின்றது.

இதேவேளை பீகார் சட்ட சபைத் தேர்தலை பாரதீய ஜனதா கூட்டணி எவ்வாறு எதிர் கொள்ளவுள்ளது. என்பது கேள்விக் குறியே!

ஏனெனில் கடந்த முறை பீகார் ஒற்றுமையின்மை காரணமாகவேதான் காங்கிரஸ் வசமாகவில்லை என்பது உலகறிந்த வியடம்! இம்முறை பீகார் காங்கிரஸ் வசமாகும். பாரதீய ஜனதா கூட்டணி கோட்டைவிடும் என்பதே இன்றைய நம்பிக்கையாக வடமாநிலத்தில் ஒளிர்கின்றது என்றால் மிகையில்லை.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

உலகில் புகழ் பெற்ற கால்பந்தாட்ட போட்டிகள் மீண்டும் தீவிரமடைந்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதற்குக் காரணம் 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப்போட்டியாகும். இதற்கான தகுதிப் போட்டிகள் ஆங்காங்கு நடைபெற்றுவருகின்ற நிலையில் கால்பந்தாட்ட அணிகளில் அறிமுக வீரர்களைக் காணும் பருவமாகவும் காணப்படுகின்றது.



இதற்கு காரணம் புகழ் பெற்ற பிரபல வீரர்கள் சிலர் ஓய்வு பெறுவதாகும், சிலர் தாமாகவே ஓய்வு பெறும் அதே வேளை சிலஅண்மை யில் சொபிக்கத்தவறியமை காரணமாகவும் ஓய்வில் செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஓய்வு பெறுவோரில்முதல் நிலையில் ஆர்ஜன்டீனாவின் கெப்ரி யல் பட்டுஸ்ட்டா, பிரான்சின் இம்மானுவல் பெட்டி ஆகியோர் அடங்குவர். சொபிக்கத்தவறியமை காரணத்தினாலும் தாமாக ஓய்வில் செல்வோர் கால்பந் தில் புகழ்பெற்ற போர்த்துக்கல் லின் லூயிஸ் பிகோ, இத்தாலியின் அலெக் சாண்டர் டெல் பியரோ ஆகியோராவர்.

டியஸ் என்ற இளம் வீரரும் முன்னணி வீரராவார். 2004 ஆம் ஆண்டு நடை பெற்ற யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் அற்புதமான கோல் ஒன்றை அடித்து அணிக்கு கிண் ணத்தைப் பெற்றுக் கொடுத் தார்.



இவ்வாறு கால் பந்தாட்ட களத்துக்கு அறி முகமாகும் இளம் வீரர்களுள் கமறூன் நாட்டின் சாமுவேல் எட்டோவும் ஒருவராவார். சென்ற முறை தென்னாபிரிக்க பிராந்தியத்தின் சிறந்த வீரராக அறிமுகமான இவர் கமறூன் அணிக்காகவும் பார்சிலோனா அணிக்காகவும் விளையாடி வருகிறார். அதேபோன்று செக் குடி யரசில் பிறந்தவரான மிலான் பாரோஸ் என்ற இளம் வீரரும் லிவர் பூல் அணிக்காக விளையாடுகின்றார். இத் தாலியைச் சேர்ந் த அன்டோனி யோ கசா னோவும் முன் னணி வீர ராக களமிறங்கி வருகிறார்.

சென்ற வருடம் ஐரோப்பிய கால் பந்தாட்டத் துறையில் விசேட இடம் பிடித்தவர் உக்ரைனைச் சேர்ந்த அன்ட்றி செச் சென்கோ ஆவார். இவர் இத்தாலியின் ஏ.சி மிலான் அணிக்காக விளையாடுகின்றார். ஐரோப்பிய லீக் போட்டி களில் திறமை காட்டிவரும் இவர் ஒரு ரஷ்ய

தற்போது உலக மெய்வன்மைப் போட்டிகளில் எதியோப்பிய குறுந்தூர, மரதன் ஓட்ட வீர வீராங்கனைகளுக்கு உயர்ந்த இடம் கிடைத்துள்ளது. அந்தளவுக்கு அவர்கள்திறமைகளை வெளிக்காட்டி வந்திருப்பதுடன் தற்போதும், வெளிக்காட்டி வருகின்றனர்.

## ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும்...

அதன்படி அந்நாட்டின் கெனனிசாபிக் கேல் என்ற வீரர்முன்னிலை வகிக்கின்றார். இவர் 2004 ஆம் ஆண்டு உலக மரதன் ஓட்ட வீரர் என்ற பட்டத்தை வென்றதுடன், அதே ஆண்டு எதென்சில் நடைபெற்ற ஒலிம்பிக்கிலும், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்றார். ஐயாயிரம் மீற்றர் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். அதுமட்டு மன்றி இம்முறை பிரான்சில் நடைபெற்ற உலக மெய்வன் மைப்போட்டியிலும் நான்கு கிலோ மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். இது நான்காவது முறையாகும். இதற்கு அவர் எடுத்துக் கொண்ட நேரம் 11 நிமிடம் 33 செக்கன்களாகும். இதற்கு முன்பு 2002, 2003, 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளிலும் வெனறார். இந்த மூன்றாண்டுகளிலும் அவருக்கு கிடைத்தபரிசுத் தொகை 1 இலட்சத்து 95 ஆயிரம் அமெரிக்க டொலராகும். 2001 ஆம் ஆண்டு நடை பெற்ற குழு நிகழ்வில் 3ஆவது இடத்தைப் பெற்ற இவருக்கு ஒரு இலட்சத்து 16 ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசாக வழங்கப்பட்டது.



எதியோப்பியா போன்ற வறிய நாடொனறில் வறுமை நிலையில் மெய் வன்மைப் போட்டிகளில் பிரவேசித்த 22 வயதே யான பிக்கேல் தான்நினைத்த காரியம் கைகூடாமல் போனமை அவருக்கு மிகுந்த கவலையளிக்கின்றது. இம் மாதம் எட்டாம் திகதி மிகவிமரிசையாக தனது மண வாழ்வை ஆரம் பிக்கவி ருந்த இவரது கனவை காலன் பறித்து விட்டான்.

இவரை மணமுடிக்க இருந்த மெய் வன்மை வீராங்கனையான அலெம் டெச்சலே என்ற வீராங்கனை பயிற்சியின்போது உயிரிழந் தமையே அந்தச் சம்பவமாகும்.

## அடுத்த போருக்கு தயாராகும் இளைஞர் அணி

இவர்கள் ஓய்வில் செல்வதால் அந்த இடத்தை நிரப்ப புதிய திறன் மிக்க இளம் வீரர்களை வல்லுநர்கள் தேடிக்கொண்டிருக் கின்றனர். இவ்வாறு இளம் வீரர்களைக் கொண்ட அணியாக இங்கிலாந்து உருவெடுத்துள்ளது. அந்த அணியின் இளம் முன்னணி வீரராக வெயின் றூனி திகழ்கின்றார். இவ்வாண்டுக் கான 19வயதின் கீழ் அணியின் சிறந்த வீரராக இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மாஞ் செஸ்டர் யுனைட்டட் அணியில் திறமைகளை வெளிப்படுத்திவருகின்றார். எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக இங்கிலாந்து இவரையேநம்பியிருக்கின்றது. அதே நாட்டில் மேலும் ஒரு வீரரான ஜோகோல், பிராங் லம்பேர்ட் ஆகியோரும் விசேட திற மை காட்டி வருகின்றார் கள் இவர்கள்50 வருடங்களின் பின் தமது கழகம் லீக் போட்டியில் வென்று வர காரண மாக இருக்கினறனர். அது போல் போர்த்துக்கேய ரான 20 வயது



கிறிஸ் டியானோ றொனால் டோ வும் மாஞ்செஸ ்டர் கழக அணிக் காக ஆடி வரும் பிர பல இளம் வீரராவார்.

கிறிஸ் நாட்டின் எஞ்சலோ ஷெரிஸ்

வீரருக்குரிய இடத்தைப் பிடிக்கிறார்.

தற்போது பிரேசில் நாட்டு வீரரான 25 வயது றொனால் டினோ கால்பந் தாட்ட போட்டிகளில் விசேட இடம் பிடித்துள்ளார். இவர் அடுத்து வரும் உலகக்கிண் ணப் போட்டிகளில் புரட்சிகர வீர ராக மிளிர் வார் என் பதில் ஐய மில்லை. இவர் முன் னைய வீரர்க ளான பிரேசில் நாட்டின் பேலே, ஆர் ஜன்டீனாவின் மர டோனாவுக் குப் பின்னர் வருகை தந் துள் ள பிரபல வீர ராவார். அதே போல பிரேசிலின் மேலும் சிறந்த இளம் வீரர்களாக அட்றியானோ, காகா இருவரும் திகழ்கின்றனர்.



அதன் படி 2006 உலகக் கிண் ண கால்பந் தாட்டப் போட்டிகளில் இளம் புயல்கள் பங்குகொள்ள விருப்பது வெற்றி தோல்வி யார் பக்கம் என் பதை கூறமுடியாதிருக்கும்.

—வடிவேல்

முன்னாள் அதிபாரக் குத்துச்சண்டை வீரர் முகமதுஅலி போன்று அற்புதமான வீரராக உலக விளையாட்டரங்கில் பெயரெடுத்துள்ளவர் மைக் டைசன் என்ற குத்துச் சண்டை வீரர்.

தற்போது 38 வயதை எட்டியுள்ள அவரைப் பற்றி விமர்சிப்போர் நோய் வாய்ப்பட்டிருக்கும் குத்துச்சண்டை களத்தையும் கடனில் மூழ்கியிருக்கும் நிலையையும் டைசன்

## வயது ஒரு காரணமா?

மீட்டெடுப்பாரா என்று கேள்வியை எழுப்புவதுடன் அவர் வயது சென்றவராகி விட்டார் என்றும் கூறுகின்றனர். சில கால்பந்து வீரர்கள் வயது சென்று விட்டாலும் அவர்கள் இன்னும் களத்தில் நிற்கின்றனர்.

அது போல மைக் டைசன் 38 வயதைத் தொட்டு விட்ட போதிலும் மீண்டும் போட்டிகளில் பங்கேற்கவிருப்பது தனது திறமை மீது கொண்டிருக்கும் நம்பிக்கையாகும். சிலர் ரசிகர்களின் வேண்டுகோளினாலும் பணத்துக்காகவும் இன்னும் களத்தில் உள்ளனர். டைசன ஜூன் மாதம் 11 ஆம் திகதி வோஷிங்டனில் நடை பெறும் குத்துச் சண்டை போட்டிகளில் கலந்து கொள்ளவிருக் கிறார். அவரைச் சந்தித்து மோத இருப்பவர் அயர்லாந் தின் கெவின் மெக் பிரைட் ஆவார். டைசன் வயது போன நிலையில் போட்டிக் குத் திரும்பியிருப் பது அனை வரினதும் புருவங் களை உயர்த்தியுள்ளது. எனவே திறமைக்கும் வயதுக்கும் நிறைய வேறு பாடு இருப்பதை மைக் டைசன் நிரூபிப் பாரா என்பது இன்னும் இரண்டு வாரங்களில்புரியும்.









புளியம்பொக்கணை சவாரித்திடலில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி. மாவட்ட சவாரிச் சங்கத் தலைவர் ஐயம்பிள்ளையும், கண்ணகையம்மன் வித்தியாலய முதல்வர் நவரத்தினமும் ஏற்றினர். தேசியக் கொடியினை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார்.

சிவலோகநாதக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமான நிகழ்வில் அ.ஆ.இ.ஈ என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்ட போட்டியில்

"அ பிரிவில் முதலாம் இடம் ம. சிறிஸ்கந்தராசா கலவெட்டித்திடல், இரண்டாம் இடம் மு. செந்தில்குமார் பிரமந்தனாறு, மூன்றாம் இடம் க. றஞ்சித்குமார் கலவெட்டித்திடல்.

"ஆ பிரிவில் முதலாம் இடம் க. சுஜீபன் தட்டுவன்கொட்டி, இரண்டாம் இடம் சி. சிவபாலன் பூநகரி, மூன்றாம் இடம் தி. டினோ வட்டக்கச்சி

"இ பிரிவில் முதலாம் இடம் ஆ. யேசுரட்ணம் பன்னங்கண்டி, இரண்டாம் இடம் கி. கிஸ்ணமூர்த்தி அக்கராயன், மூன்றாம் இடம் ஞா. வசந்தன் வட்டக்கச்சி.

"ஈ பிரிவில் முதலாம் இடம் த. ஜொனி நெத்தலியாறு, இரண்டாம் இடம் மு. செந்தில்குமார் பிரமந்தனாறு, மூன்றாம் இடம் வே. பிரபாகரன் முரசுமோட்டை ஆகியகாளைச் சோடிகளை வெற்றி பெற்று பரிசில்களை தமதாக்கிக் கொண்டது. இப்போட்டிக்கு பல முன்னனிக் காளைச் சோடிகள் பங்கு பற்றின.

இதேவேளை எதிர்வரும் 5ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம் நடத்த முடிவு

மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் அமைப்பு தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான கவன யீர்ப்பு போராட்டம் ஒன்றை முன் னெடுக்கவுள்ளது. இதனடிப்படையில் இந்தப் போராட்டம் எதிர்வரும் மூன் றாம் திகதி கொழும்பில் நடை பெறவுள்ளதாக மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக் கத்தின் அமைப்பாளர் இ. தம்பையா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த நோக்கத்திற் காக கொத்மலைத்திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ள பத்தனை பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற போராட்டம் வெற்றி பெற்றதை அடுத்தே கொழும் பில் அதனை நடத்த ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதாக தம்பையா குறிப்பிட் டார்.

இந்த திட்டத்தின் மூலம் தமி ழர்கள் செறிந்து வாழும் மலைய கப்பகுதியில் சுற்றாடல் பாதிப்பு ஏற்படும் என்பதுடன் சிங்களக் குடியேற் றங்கள், அதற்கு பாதுகாப்புக்காக இராணுவ முகாம்கள் என்பன அமைக்கப்பட வாய்ப்புள்ளதாக மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான அமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே இதனை ஜப்பானிய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் முகமாகவே கொழும் பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

## எஸ்.பி. திஸாநாயக்கவின் விடுதலை; படிப்படியாகவே நடவடிக்கை எடுக்கலாம்

*— மிலிந்த மொறகொடவிடம் சனாதிபதி தெரிவிப்பு*

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக் கப்பட்டுள்ள எஸ்பி. திஸாநாயக்கவை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கை களைத் தான் படிப்படியாகவே செய்ய முடியுமென சனாதிபதி சந்திரிகா குமார துங்க இது தொடர்பாக அவரைச் சந்தித்த ஐ.தே. க. பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனி இரவு இடம் பெற்ற இச்சந்திப்பின் போது அவர் மேலும் கூறுகையில்; எஸ்.பி. திஸா நாயக்க இதுவரை தன்னிடம் மன்னிப் புக்கோரும் மனு எதனையும் சமர்ப்பிக் கவில்லையெனவும் ஐ.தே.க மன்னிப் புக் கோரியிருந்தாலாவது தான் நடவ டிக்கை எடுத்திருக்க முடியும் எனவும் கூறினார்.

இப்பொழுது மிலிந்த மொறகொட வின் கோரிக்கைக்கு இணங்க நடவ டிக்கை எடுப்பதுடன் அது குறித்து அறியத்தருவதாகவும் கூறினார்.

எனினும் உயர் நீதிமன்றத் தீர்ப்பை நேரடியாக மாற்ற முடியாது. கட்டம் கட்டமாகவே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சனாதிபதி சந்திரிகா கூறினார்.

தன்னைப் பற்றிச் சில தகவல் களை எடுத்துச் சென்று எஸ்.பி. திஸா நாயக்க புத்தகமாக எழுதிவருவதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி யையும் சனாதிபதி சந்திரிகா குமார துங்க சுட்டிக்காட்டினார்.

எஸ்.பி.திஸாநாயக்கவை விடு விக்கக் கோரும் இச்சந்திப்பு சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு இடம்பெறுவதாக இருந்த போதும் 10.00 மணிக்கே இடம் பெற்றது.

(32)


# VACANCY

## Communication/Media relations officer

CARITAS-Hudec is a Humanitarian organization.
With in the framework of its 2 years program for relief after the tsunami disaster. CARITAS-Hudec needs a communication/ media relations officer, operating in Jaffna and Vanni districts with basis in Jaffna.

**JOb description, M/F**
**Communication/ Media relations officer**

The officer is responsible for organizing the logistics of the (national and international) visitors to CARITAS-Hudec. who stay in Jaffna as well as their travels (clearances, transport, vehicles, logistics and accommodations) to the field. The officer is to accompany the visitors on field trips, where he/she presents the program activities, is in charge of translation and ensures a good understanding by the visitors of the CARITAS-Hudec program acti vities.
The officer assists the international communication officer in the development and production of tools and communication materals for journalists and visitors such as maps. present ation of our programas, fact sheets, press release and data such as photos, interviews held and updated reports of all our activities.

**Requirements**

*. Experience in media relations, Journalism, or corporate com munication (minimum 2 years)
*. Good writing and editing skills in English.
*. Good knowledge of local news papers and infomation gathering.
*. Fluency in Tamil and English, Basic know ledge in Sinhala is a plus
*. Good interpreting and translating skills (oral and written)
*. Ability to work in the field and travel extensively, in partcular in vanni district.
*. Good team player with good communication skills.
*. Proficient computer skills (Maicrosoft officer, Internet, photoshop...)

Please send and application (CV and covering letter) by monday the 6th of June to the director of CARITAS-Hudec: E-mail application shall be send hudec@sltnet.lk

**Father Jeyakumar**
**CARITAS-Hudec**
**14, Mathew's Road, Deogu Street, Jaffna**
**Only short listed condidates will be contacted.**

(சி.12165)



**பியர் போத்தல் கொள்வனவு செய்யப்படும்**

எமது நிறுவனத் தேவைக் காக பியர் வெற்றுப்போத்தல் 625 மி.லீ நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையா கவும் கொள்வனவு செய்யப் படும். (நல்ல நிலையில் உள்ள போத்தலாக இருக்க வேண்டும்)

*தொடர்பு:- வடமாகாண ப.தெ.வ.அ. கூ.ச.நி பேரிணையம், (வெ[illegible]ரா முன்பாக) [illegible]வீதி, கிளிநொச்சி*

(சி12164)



சௌகரியமான, பாதுகாப்பான உண்மையான திறில்

புத்தம் புதிய மோட்டார் சைக்கில்கள்

# DAIDO AND YAMATO

*Born to Lead*

CF90-C Super Cub



CF100-9



CF70-Q CF90-Q



XF100-S



*1 வருட உத்தரவாதம் அல்லது 10,000K.M. 4 ஸ்ட்ரோக் என்ஜின்
* லீட்டருக்கு 50-75 கி.மீ. (சீரான போக்குவரத்து முறையில்)
* கீழ் தள்ளி மற்றும் தன்னியக்கி
*12V பட்டரி * விற்பனைக்கு பிந்திய 3 சேவைகள்
* கண்கவர் வர்ணங்களுடன் புதிய ரகங்களில்

**இலவசம்!** தலைக்கவசம், மேலங்கி மற்றும் கருவிகள்

உதிரிப்பாகங்களுக்கு நாடளாவிய ரீதியில் உள்ள எமது விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக இறக்குமதியாளர்:
**சொண்டிப் மோட்டர் எண்டபிறைசஸ் (பிறை.) லிமிட்.**
60-B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை.: 011-2341580-1, 2438779 தொ.நகல்: 011-2454608





முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியில்

ஓவியர் புகழேந்தியின்

# 'புயலின் நிறங்கள்'

ஓவியக்கண்காட்சியும், கருத்துப்பகிர்வும்

காலமும், இடமும்:- 31.05.2005-காலை 10.00 மணி
முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி
01.06.2005-காலை 10.00 மணி
புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி,

குறிப்பு:- மாலை 4.00 மணியளவில் இரு இடங்களிலும் நடைபெறவுள்ள இளம் ஓவியர்களுக்கான கருத்துப் பகிர்வில் கலந்துகொள்ளுமாறு அனைத்து இளைய ஓவியக்கலைஞர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரியினர்

(சி.11981)

# தென்னிந்திய நடிகர் விஜயகாந்த் அரசியலில் பிரவேசிக்கிறார்



தெனிந்திய நடிகர் விஜயகாந்த் அரசியலில் குதிக்கிறார். ரசிகர் மன்ற முன்னணி நிர்வாகிகளுடன் கடந்த சில நாட்களாக இது குறித்து ஆலோசனை நடத்திய விஜயகாந்த் புதிய கட்சியின் பெயர், கொடி போன்றவை குறித்துக் கருத்து கேட்டார். மாநிலம் முழுவதும் தனக்குள்ள செல்வாக்குப் பற்றி கருத்துக்கணிப்பு நடத்தினார்.எனவும் தெரிவிக்கப் படுகிறது

இதையடுத்து அரசியல் பிரவேசத்தை நாளை முதலாம் திகதி ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில் நிருபர்களை அழைத்து அதிகார பூர்வமாக அறிவிப்பார் எனத் தெரிகிறது.

தமிழ் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழர் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய பெயர்கள் பரிசீலனை யில் உள்ளன. இவற்றில் ஏதேனும் ஒரு பெயரை புதுக்கட்சிக்கு சூட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சிக்கு புதிய கொடி தயாராகி விட்டது. கறுப்பு, சிவப்பு நிறத்தில் நடுவில் ஜோதியுடன் கொடி அமைகிறது. லட்சக்கணக்கில் இந்தக் கொடிகள் தயாராகி வருகின்றன.

மதுரை அரசியல் மாநாட்டுக்கு திரண்டு வாரீர் என்று சுவர் விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.



தமிழகம் கோவை மண்டல மாநாட்டில் திரண்டிருந்த தி.மு.க.வினரின் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

# காஷ்மீரின் ஒரு பகுதிக்கு சுயாட்சி வழங்கப்படும்

—— பிரதமர் மன்மோகன்சிங் ——

இந்திய பாகிஸ்தான் உறவில் புதிய அத்தியாயமாக காஷ்மீரின் ஒரு பகுதிக்கு சுயாட்சி வழங்க முஷாரப்பின் யோசனையை ஏற்று மன்மோகன்சிங் சம்மதம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது, இந்திய-பாகிஸ்தான் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண உண்மையான முயற்சியை மேற்கொண்டிருக்கின்றோம். சில சந்தர்ப்பங்களில் தடங்கல் ஏற்படுகிறது. நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகளை பலப்படுத்தவும் இருநாட்டு மக்களுக்கு இடையே உள்ள நேரடித் தொடர்பை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சியாச்சின் எல்லைப் பகுதியில் படைகளைக் குறைப்பது தொடர்பாக இருநாட்டு பாதுகாப்புத்துறை செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது என்றார் மன்மோகன்சிங்.



இந்திய காஷ்மீர் எல்லையிலுள்ள குப்வாரா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலியான இந்திய இராணுவத்தினர் இருவரின் உடல்களை சக வீரர்கள் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய் வதற்காகக் கொண்டு வந்திருந்த காட்சி.


## பணியாளர் தேவை

1.சாரதி அனுமதிப்பத்திரமுள்ள கனரக வாகன ஓட்டுனர் குறைந்தது மூன்று வருட அனுபவம் (வயதெல்லை 30 தொடக்கம்55 வரை)

2.கனரக இயந்திர இயக்குனர் (EXCAVATOR OPERATOR, இரண்டு வருட அனுபவம்.

3.இயந்திர திருத்துனர்.

மேற்படி பதவிகளுக்கு தகுதி உடையோர் நற்சான்றிதழுடன் நேரில் வரவும்.

*யூரோவில்,*
*முல்லை. மாவட்ட வைத்தியசாலை நிர்மாணம்,*
*மாஞ்சோலை,*
*தண்ணீர் ஊற்று*

(6219)



## வலயக்கல்வி அலுவலகம் துணுக்காய்

## கேள்வி அறிவித்தல்

வலயக்கல்வி அலுவலகம் துணுக்காய் பாடசாலை கட்டட நிர்மாண வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இக்ராட் (ICTAD) தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்கள் துணுக்காய் வலயக்கல்வி அலுவலக கேள்விச்சபை தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலைவிபரங்கள்

| இல | வேலை விபரங்கள் | மீளளிப்பு வைப்பு | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|
| 01 | மு/துணுக்காய் அ.த.க.பா கட்டடத்திருத்தம் 37'0"X24'0" | 3000.00 | 250.00 |
| 02 | மு/அனிஞ்சியன் குளம் த.வி கட்டடத்திருத்தம் 26'0"X36'0" | 2000.00 | 250.00 |
| 03 | மு/தண்டுவான் அ.த.க.பா கட்டடத்திருத்தம் 37'0"X24'0" | 7000.00 | 250.00 |
| 04 | மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா வகுப்பறை பிரித்தடைத்தல். | 2500.00 | 250.00 |
| 05 | மு/ஐயன்கன் குளம் அ.த.க.பா வகுப்பறை பிரித்தடைத்தல் | 2500.00 | 250.00 |
| 06 | மு/ஐயன்கன் குளம் அ.த.க.பா நீர்விநியோகம் | 650.00 | 250.00 |
| 07 | மு/துணுக்காய் அ.த.க.பா நீர்விநியோகம் | 650.00 | 250.00 |
| 08 | மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா நீர்விநியோகம் | 650.00 | 250.00 |

01.06.2005 தொடக்கம் 10.06.2005 வரை கேள்விப்பத்திரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய், மாங்குளம் என்ற முகவரிக்கு 23.06.2005 பிற்பகல் 1.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அன்று மாலை 3.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப் பத்திரங்கள் திறக்கும் போது பிரசன்னமாயிருக்க வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் பாடசாலை வேலைப் பிரிவில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் எதுவுமின்றி கேள்விதாரர்கள் பார்க்க முடியும்.

ஏ.ஜே.குரூஸ்,
தலைவர்,
கேள்விச்சபை,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்

(சி.12166)



## நீங்காத நினைவில் நிறைந்திருக்கும் எம் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1973 12 15



சிவபதம் 2004 06 11

செல்லத்துரை –சுரேஸ்
(நளின்)

ஆண்டொன்று ஓடிவிட்டது. ஆறவில்லை எம்துயர்
கண்ணீரில் கரையாத காவிய நினைவுகளோடு
காய்ந்தது ஓராண்டு உங்கள் பரிவுக்குரல் கேளாது
அன்பு வதனம் காணாது பரிதவிக்கின்றோம் நாம் இங்கு
அன்பும், ஆதரவு, இனிமை அனைத்தும்
கலந்து எம் எல்லோரையும் கவர்ந்த உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(6117)

தகவல்: க.பஞ்சலிங்கம் (மாமன்)

மனைவி, மகள்,
குடும்பத்தார்.

# பாபடோஸ் டெஸ்டில் மே.இ.வெற்றி; தொடர் தோல்வியிலிருந்து மீண்டது



பாபடோஸில் நடைபெற்ற பாகிஸ்தானுக்குகெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 276 என்ற பாரிய ஓட்ட வித்தியாசத்தால் வென்று தனது தொடர் தோல்விக்கு முடிவு கட்டியுள்ளது.

இப்போட்டியில் நான்காம் நாளான நேற்று முன்தினம் முன்னைய நாள் ஓட்ட எண்ணிக்கையான 168 இற்கு ஐந்து விக்கெட் என்ற நிலையில்ஆட்டத்தைத்தொடர்ந்த பாகிஸ்தானின் சயிட் அப்ரிடி அசிம் கமல் இணை அணியின் எண்ணிக்கையை ஓரளவு அதிகரித்தபோதும் அவ் இருவரும் ஆட்டமிழந்ததும் ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். அப்ரிடி 90 பந்துகளைச் சந்தித்துஆறு, ஆறுஓட்டங்கள் ஒன்பதுநான்குஓட்டங்கள் உட்பட 122ஓட்டங்களைப்பெற்று கைலின் பந்து வீச்சில் சந்தர்போலிடம்பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அசிம் கமல் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அப்துல் ரசாக் நான்கு நான்கு ஓட்டம் ஒரு ஆறு ஓட்டம் உட்பட 41 ஓட்டங்களைப் பெற்றார்.மேற்கிந்தியத் தீவு சார்பில் கிறிஸ்கெய்ல் இரண்டாவது இன்னிங்சில்97 ஓட்டங்களுக்குஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.



இப்போட்டியில் ஆட்ட நாயகனாக ஆட்டமிழக்காது 153ஓட்டங்களைப் பெற்ற சிவ்நரேன் சந்தர் போல்தேர்ந் தெடுக்கப்பட்டார்.

தொடரின் இரண்டாவதும் இறுதியுமான ஆட்டம் வரும் வெள்ளியன்று யமேக்காவில் நடைபெறும்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் யுசுப் யுகானா பங்கேற்க மாட்டார்



பாகிஸ்தான் துடுப்பாட்டவீரர் யுசுப் யுகானா தனது சுகவீன முற்றிருக்கும் தந்தையை பார்ப்பதற்காக நாடுதிரும்பியுள்ளதால் மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டாவது டெஸ்ட்போட்டியில் பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ஒரு டெஸ்ட்போட்டியில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்ட அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் அணிக்குத் திரும்புவார். சனியன்று நாடுதிரும்பிய யுகானா யமேக்கா-போட்டியில் பங்கேற்கத் தமக்கு நேரம்கிடைக்காது எனத் தெரிவித்துள்ளார்.


# பாக்.முன்னாள் அணித்தலைவர் பசால் முகமூத் காலமானார்



பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் பசால். முகமூத் நேற்று அவரது 78ஆவது வயதில் காலமானார் மாரடைப்புக் காரணமாக இவர் மரணமடைந்தார். மிதவேகப் பந்து வீச்சாளரான இவர் 1954இல் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட்போட்டியில் முதல் தடவையாக இங்கிலாந்து அணியை பாகிஸ்தான் வெற்றி கொண்டபோது 12 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். அத்துடன் 1952 ஆம் ஆண்டு லக்னோவில் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் முதல் தடவையாக இந்தியாவை வெற்றி கொண்டபோது 94 ஓட்டங்களுக்கு 12விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். 34 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 139 விக்கெட்டுகளை (சராசரி 24.7) கைப்பற்றிய இவர் 10 தொடர்களுக்கு தலைமை தாங்கியிருந்தார்.

## -பிரான்ஸ் ஓப்பன் டெனிஸ்-

# பயஸ், பூபதிஜோடிகள் காலிறுதிப்போட்டிக்குத் தெரிவு


றோஜர்

பிரெஞ் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இரண்டையர் ஆட்டத்தில் லியாண்டர்பயஸ் ஜோடி காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது இதே வேளை கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் மகேஷ் பூபதி ஜோடி காலிறுதிக்கு முன்னேறியது.

பரிஸ் நகரில் பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்திய வீரர் லியாண்டர் பயஸ்- செர்பியா வீரர் நீனாட் சிமோன்ஜிக் ஜோடி வெற்றி பெற்று காலிறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. இந்த ஜோடி உலகத்தர வரிசையில் ஏழாவது இடத்தில் உள்ள ஜோடியாகும்.

நேற்று முன்தினம் லியாண்டர் பயஸ் ஜோடியும், செக்குடியரசு நாட்டின் ஜோடி பிரண்டிசெக்-லியோஸ் ஆகியோரும் மோதினார்கள். இதில் லியாண்டர் பயஸ் ஜோடி 7-6, 6-4 என்கிற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்றது.

காலிறுதிப் போட்டியில் மகேஸ் பூபதி ஜோடியும், அமெரிக்காவைச் சேர்ந்த மைக்-பாப் ஜோடியும் மோதுகிறார்கள். மைக்-பாப் ஜோடி உலகத்தர வரிசையில் மூன்றாவது இடத்தில் இருக் கிற ஜோடியாகும்.

**மகேஸ் பூபதி ஜோடி வெற்றி**

கலப்பு இரட்டையர் பிரிவில் இன்னொரு இந்திய வீரர் மகேஸ் பூபதி ஜோடி வெற்றிபெற்றது. அவரும் அமெரிக்க வீராங்கனை லிசாவும் இணைந்து சிறப்பாக ஆடினார்கள். அவர்கள் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் 7-5, 7-6 செட் கணக்கில் கேதரினா (ஸ்லோவாகியா) டாட் உட்பிரிஜ் (அவுஸ்திரேலியா) ஜோடியை வென்றார்கள். இந்த வெற்றி மூலம் மகேஸ்பூபதி ஜோடியும் கலப்பு இரட்டையர் பிரிவில் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

**காலிறுதியில் டேவன்போர்ட்.**

நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் டேவன்போர்ட்-கிம்கிளிஜ்டர்ஸ் ஆகியோர் மோதினார்கள். அதில் டேவன் போர்ட் கடும் போராட்டத்திற்குப் பிறகு 1-6,7-5,6-3, செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

நேற்று இன்னொரு ஆட்டத்தில் 15 வயது இளம் வீராங்கனை கரத்தான் செவா அபாரமாக ஆடி சுவிஸ் வீராங்கனை காக்லியார்டியை வென்று காலிறுதிப்போட்டிக்குத் திகதி பெற்றார். இந்த கரத்தான் செவா ஏற்கனவே மூன்றாவது சுற்று ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்சைத் தோற்கடித்தவர் என்பது நினைவிருக்கலாம்.


**அமெலி மவுரிஸ்மா தோல்வி**

நேற்று முன்தினம் நடந்த மகளிர் பிரிவு இன்னொரு ஆட்டத்தில் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சம்பியனான பிரான்ஸ் வீராங்கனை அமெலி மவுரிஸ்மா அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளானார். அவரை செர்பியா வீராங்கனை 17 வயது அனா இவானோவிக் வீழ்த்தினார். இருவருக்குமிடையே போட்டி கடுமையாக இருந்தது. மவுரிஸ்மா 4-6,6-3, 4-6 செட் கணக்கில் சரணாகதியடைந்தார்.

ஆண்கள் பிரிவு ஆட்டம் ஒன்றில் ஆர்ஜென்டீனா வீரர் கில்லர் மோகோரியா 6-1, 6-1,7-6 செட் கணக்கில் அவுஸ்திரேலிய வீரர் மெல்சரைத் தோற்கடித்தார்.

அதேவேளை மேலும் ஒரு ஆண்கள் ஒற்றையர் போட்டியில் முன்னணி வீரர் றோஜர் பெடரர் முன்னாள் சம்பியன் கார்லோஸ் மோயாவை 6-1,6-4, 6-3, என்ற செட்டில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

# சபிர் அகமட்டின் பந்து வீச்சில் சந்தேகம் எழும்பியுள்ளது.



பாபடோசில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சபிர் அகமது பந்து வீசிய முறை தவறானது என சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறையிடப் பட்டுள்ளது.

இந்தப்போட்டியில் இரு இன்னிங்சுகளிலும் அவரது பந்துவீச்சைப் பார்க்கும்போது கவலையளிப்பதாக இருந்தது எனப் போட்டி நடுவர் றஞ்சன் மடுகல்ல தெரிவித்துள்ளார்.

இவரது பந்து வீச்சு ஐ.சி.சி யின் உதவியுடன் பரிசீலிக்கப்படவேண்டும் என்றும், 14 நாட்களுக்குள் இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த ஆய்வு அறிக்கை அவர் 15 பாகைக்கு மேல் கையை வளைத்துப் பந்துவீசுகிறாரா, இல்லையா என்பது தெரிய வரும்.

சபிர் அகமட் மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் 176 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# டெண்டுல்கரின் காயத்துக்கு அவரது துடுப்புக் காரணமல்ல

இந்தியகிரிக்கெட் அணி நட்சத்திர வீரர் டெண்டுல்கர் தனது முழங்கையில் ஏற்பட்ட காயத்தால் அவதிக்குள்ளாகி வருகிறார்.

இதையடுத்து அவருக்கு லண்டன் ஆஸ்பத்திரியில் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. இது குறித்து இந்திய அணியின் உடற்பயிற்சி டாக்டர் ஜான் குளோஸ்டர் கூறியதாவது, டெண்டுல்கருக்கு செய்யப்பட்டுள்ள இந்த அறுவைச்சிகிச்சையால் அவர் இனி நிரந்தரமாகக் குணமடைவார். அறுவைச்சிகிச்சை செய்வதற்கு உகந்த நேரம் இதுதான். எனவேதான் சிகிச்சை செய்யப்பட்டது.

அவர் நான்கு மாதம் வரை ஓய்வு எடுக்கவேண்டி இருக்கும் என்பது தவறானது. விரைவிலேயே குணம் அடைந்து விளையாட்டுக்குத் திரும்பலாம்:

டெண்டுல்கருக்கு ஏற்பட்ட காயத்துக்கு அவர் பயன்படுத்தும் துடுப்பின் எடை காரணம் அல்ல. அவர் 16 வருடமாக இதேஎடையுள்ள பேட்டைத்தான் பயன்படுத்தி வருகிறார். எந்த எடைகொண்ட பேட்டை அவர் பயன்படுத்தவேண்டும் என்பதில் நான் தலையிட முடியாது என்றார்.




## -தாச்சிச் சுற்றுப்போட்டி-

# இணுவில் கலாஜோதி வி.க, கைதடி அருள் வி.க.வெற்றி

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன், இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகமும் பெண்கள் பிரிவில் கைதடி அருள் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகமும், தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டதில் கலாஜோதி விளையாட்டுக்கழகம் ஐந்திற்கு நான்கு என்ற பழக்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் அரியாலை காந்தி விளையாட்டுக்கழகமும், கைதடி அருள் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டதில் அருள் விளையாட்டுக்கழகம் ஏழுக்கு ஆறு என்ற பழக் கணக்கில் சாந்தி விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது. (41)

# மாணவர் எழுச்சிநாள் போட்டிகளில் சிறுமாற்றம்


மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு கிளி. மாவட்ட விளையாட்டுத் துறை நடாத்தும் மரதன், துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டியில் பெண்களுக்கான மர்தன் ஓட்டமும், ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டமும் மாத்திரமே நடைபெறும்.

31-05-2005 காலை 6.00 மணிக்கு பெண்களுக்கான மரதன் ஓட்டமும்,1-06-2005 ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டமும் நடைபெறும். ஏற்கனவே குறிப்பிட்ட இடங்களில் இப் போட்டிகள் நடைபெறும். ஆண்களுக்கான மரதனும், பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டமும் பின்ஒரு திகதியில் நடாத்தப்படும் என கிளி. மாவட்ட விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் ஊரக வளர்ச்சிப் பணியினரால் பராமரிக்கப்பட்டுவரும் இளங்கோபுரம், விசுவமடுவில் அமையப்பெற்றுள்ள சோழர் சிறுவர் பூங்காவின் 12ஆம் ஆண்டு நிறைவு விழாவும், சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வு நிகழ்வும் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் சிறார்களின் "பான்ட் வாத்திய" அணிவகுப்புடன் பூங்கா நிர்வாகி திருமதி இசைஞானவதி அருந்தவநாதன் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

## சிந்தனைக்கு



எமது மொழியில்,எமது கலைகளில், எமதுபண்பாட்டில், எமதுமண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசியப் பற்றுணர் வாகப்பரிணாமம் பெறுகின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 31-05-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com


## நகரமுடியாத நிலையில் அரசு

ஆழிப்பேரலை மீள்கட்டுமானப் பணிகளால் சிறிலங்கா அரசு செயலற்றுக் கிடப்பதாகக் கூறும் லண்டன் டெய்லிகிராப் நாளிதழின் கட்டுரையாளர், பல மில்லியன் பணத்தைக் கொட்டிக்கொடுத்த இங்கிலாந்து மக்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான வீடுகளைக் கட்ட தங்களது உதவியால் செங்கற்களும், சீமெந்தும், மரங்களும் லொறிலொறியாக அந்த மக்களுக்குச் சென்றடைந்து இருக்கும் எனக் கற்பனை செய்துகொண்டிருக்கின்றனர்.அனால் அவர்கள் உண்மை நிலையைப் பார்த்தால் மூர்ச்சை அடைந்து விடுவார்கள் எனத் தெரிவிக்கின்றார்.

ஆழிப்பேரலையால் அழிவுற்ற பகுதிகளை மீள் கட்டுமானம் செய்ய சர்வதேச நாடுகள் பெருந்தொகை நிதியை அள்ளிக் கொடுக்கத் தயாராகவுள்ளன. பல்வேறு நாடுகளும் பல கோடிக் கணக்கான ரூபாக்களை சிறிலங்கா அரசாங்கத்திடம் ஏற்கனவே வழங்கியும் விட்டன. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்கட்டு மான நடவடிக்கைகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

அதிலும், டெய்லிகிராப் பத்திரிகையாளர் குறிப்பிடும் காலிப்பிரதேசம் அரசாங்கத்தின் தீவிர கண்காணிப்பிற் குள்ளாகியுள்ள பிரதேசம் என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசியல் இலாப நோக்கம் கருதிக் காலியில் அரசாங்கம் மீள்கட்டுமானப் பணியில் தீவிர அக்கறை காட்டுவதாக ஏற்கனவே சிறிலங்கா அரசியல் வட்டாரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

சிறிலங்கா அரச நிர்வாகத்தின் செயற்திறமையின்மை குறித்து ஆழிப்பேரலைக்கு முன்பதாகவேபெரும்விமர்சனங்கள் இருந்ததுண்டு. உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் கூட இவற்றைச் சுட்டிக்காட்டியதுண்டு. சிறிலங்கா அரசு திட்டமிட்ட முறையில் அபிவிருத்தியடையாமைக்கு நிர்வாக அதிகாரிகளின் திறமையின்மையே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அது மட்டுமன்றி சிறிலங்கா அரச நிர்வாகத்தில் காணப்படும் பெரும் ஊழல் மோசடிகளும் இந்நிலைக்கு மற்றொரு காரணமாகும். ஏற்கனவே நிவாரணப்பணிகளில் பல நிர்வாகிகள் ஊழல் மோசடி களில் சம்பந்தப்பட்டதான தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சுனாமி அனர்த்த மீள்கட்டுமானம் கிடப்பில் போடப்பட்டுள்ளமைக்கு அரச அதிகாரிகளின் திறமையின்மை, அதிகாரிகளின் ஊழல் மோசடிகள் என்பனவற்றுடன் அரசியலும் இணைந்துள்ளது. அதாவது தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்பட்டால் போதும் என்ற ஆளும் கூட்டணி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளின் முடிவும், உதவி வழங்குவோர் மீதான சந்தேகமும் இந்நிலை ஏற்படக் கார ணமாகும்.

ஆழிப்பேரலை மீள்கட்டுமானத்திற்கென உதவி வழங்கும் நாடுகளில் பெரும்பாலானவை இதற்கெனப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. அமெரிக்காவின் முன்னாள் சனாதி பதியும், ஐ.நா வின் விசேட துதருமான பில் கிளிங்டன் கூட பொதுக் கட்டமைப்பிற்குத் தமது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளார். அத்தோடு சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளில் பெரும் பாலானவை பொதுக் கட்டமைப்பு விடயத்தில் முன்னேற்றம் காணப் படும் பட்சத்திலேயே வாக்குறுதி அளித்த உதவிகள் வழங்கப்படும் என உறுதிபடத் தெரிவித்துள்ளன.

ஆனால் ஆளும் கூட்டணி அரசாங்கத்தின் முக்கிய பங்குதாரர் களான ஜே.வி.பி யினர் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாகும் பட்சத்தில் வடக்கு- கிழக்கிற்கு நிதியுதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய தான சூழ்நிலை உருவாகிவிடும் என்ற காரணத்தினால் பொதுக்கட்டமைப்பிற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வரு கின்றனர். பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமானால் ஆட்சியைக் கவிழ்க்கத் தயங்கப் போவதுமில்லை எனவும் எச்சரிக்கின்றனர்.

இது மட்டுமன்றி ஆழிப்பேரலைமீள் கட்டுமானப் பணிகளில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டிற்கும் அவர்கள் பெரும் முட்டுக் கட்டைகளைத் தோற்றுவிப்பவர்களாகவே உள்ளனர். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவை அரசாங்கத்தை ஆட்டிப் படைக்க முற் படுவதாகவும், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற் படுவதாகவும் ஜே.வி.பி குற்றம் சாட்டி வருகின்றது.

ஜே.வி.பி யின் இத்தகைய நிலைப்பாடானது சர்வதேச நிதியுத விகள் அரசின் ஊடாகவோ அன்றி அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவோ பாதிக்கப்பட்ட மக்களைச் சென்ற டைவதில் முட்டுக் கட்டையைத் தோற்றுவிப்பதாகவே உள்ளது. சுருக்கமாகக் கூறுவதானால் அரசினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாட்டிற்கு ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் பெரும் இடையூறாகியுள்ளது.

ஜே.வி.பி யின் தற்போதைய செயற்பாடானது தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்பட்டாக வேண்டும் என்பதாகவேயுள்ளது. அதாவது சிங்களப் பிரதே சங்களில் மீள் கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றதோ இல்லை யோ தமிழர் தாயகப் பகுதியில் மீள்கட்டுமானப் பணிகள் எவையும் இடம்பெற்று விடுதல் கூடாது என்பதாகவே உள்ளது.

இதன் காரணமாக அரசாங்கம் சர்வதேச நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கூட முன் நோக்கி நகர முடியாததொரு அவல நிலையில் உள்ளது என்பதே இன்றைய அவலமாகும். இந் நிலையில் மீள் கட்டுமானப் பணிகளில் எவ்வாறு முன்னேற்றம் ஏற்பட முடியும்? அரசாங்கத்தின் செயற்றிறன் இன்மையும், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குப் போடப்படும் முட்டுக் கட்டையும் மீள் கட்டுமானப் பணிகளை முடக்கியுள்ளது. இது உதவி வழங்கும் நாடுகளையும், மக்களையும் ஏமாற்றம் கொள்ள வைப்பதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

# நாம் தமிழரசை அமைக்க வேண்டும்; சமாதானக்காலம் இதனை வலியுறுத்தி நிற்கின்றது

### –தூயவன் அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

நாம் தமிழீழ அரசை அமைத்து சிங்களப் பேரினவாதத்தினிடமிருந்து பிரிந்து வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதனை எமக்கு இந்த நான்கு வருட சமாதான காலம் வலி யுறுத்தி நிற்கின்றது என தூயவன் அரசறிவியல்கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பரந்தன் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்ட பத்தில் சங்கத் தலைவர் நடராசா தலைமையில் நடைபெற்ற சமகாலக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் ஆரம்பத்தில் தனி ஈழம் கோரினோம். பின் நோர்வேமத்தியஸ்த் தத்தின் பின் இறங்கி சமஷ்டி அரசினை ஏற்றோம். அதையும் தர மறுத்தது அரசு. பின் இடைக்கால தன்னாட்சி முறையைக் கோரினோம். அதுவும் சாத்தியப்படாத நிலையில் சுனாமியின் பின்னான பொதுக் கட்டமைப்பினை ஏற்றோம். ஆனால் இந்தப் பேச்சுக்களை இழுத்தடிப்புச் செய்த காலத்தில் நாம் பல போரா ளிகளை இழக்க வேண்டி ஏற்பட்டது. அந்த நிலையில் கூட எமது தேசியத் தலைவர் பொறுமை காத்து வந்தார்.

இன்று நீங்கள் ஒவ்வொருவரும் எழுச்சி கொள்வதைப் பார்த்தால் நாம் எமது இலட்சியமான தமிழீழத்தை வென்றெடுக்கும் காலம் அண்மையில் வந்துவிட்டதை உணருகின்றோம். ஆயுதப் போராட்டம் மூலமே எமது தேச விடுதலையை வென்றெடுக் கலாம் என்பதனை மக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளும் இக்காலகட்டத்தில் நாம் எமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி வெற்றி கொள்வோம் என்பது உறுதி எனவும் கூறினார்.

இந்நிகழ்வில் கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலை வாணன், கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை, கிளி. கூட்டுறவு ஆணையாளர் மயூரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பாளர் தியாகராசா ஆகியோர் கலந் கொண்டனர். (சோ)

# கண்காணிப்புக் குழு அலுவலகம் முன் பிரேதப்பெட்டி ஆர்ப்பாட்டம் செய்து பயனில்லை

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலக வாசலில் பிரேதப் பெட்டிகளை வைத்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதில் எவ்விதபயனும் இல்லை என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் ஈ.பி.டி.பி, புளொட்,மற்றும் ஈ.பி. ஆர்.எல்.எப். பத்மநாபா அணி பிரதி நிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக் களப்பிற்கு சென்ற இவர் இக் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆட்கொலைகள் மற்றும் வன் முறைகளைப் பொறுத்தவரை இது சட்டம் ஒழுங்கிற்கு உட்பட்டது. இதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத் ததைச் சார்ந்தது. இந்நிலையில் பிரேதப்பெட்டிகளை எடுத்து வந்து எமது அலுவலகம்முன்பு வைத்து ஆர்ப்பாட்டங்கள் செய்வது பரச் சினைக்குத்தீர்வாக அமையாது.

கிழக்கு மாகாணத்தில் தொடரும் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்காகக் கண்காணிப் பாளர் களின் எண்ணிக்கையை அதி கரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நிறுத்தப்பட்டுள்ள சிறிலங்கா அரசபடையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பை மீண்டும் தொடர்வதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஹக்ராப் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளார்.

# ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்; உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### சுதந்திர ஊடக இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு ஏற் பட்டுவரும் அச்சுறுத்தல்கள் தொட ர்பில் உடன் நடவடிக்கைகள் எடுக் கப்பட வேண்டுமென சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது

இது தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவிக்கை யில் ;அச்சுறுத்தலுக்குள்ளான ஊடக வியலாளர்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அச்சுறுத் தலுக்கு உள்ளாகியிருக்கும் ஊடக வியலாளர்களின் பாதுகாப்பை உறு திப்படுத்துவது அவசியம்.

ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்களை உடனடி யாக இனம் கண்டு பிடித்து தண்டிக்க வேண்டும். இறுதியாக ராவய பத்திரி கையின் ஆசிரியர் ஊடகவியலாளர் விக்டர் ஐவனுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது இது குறித்து அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுள்ளார். (32)

# பொதுக்கட்டமைப்புக் குறித்து விளக்க ஜாதிக ஹெல உறுமயவுக்கு அழைப்பு

கொழும்பில் உள்ள உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் ஜாதிக ஹெல உறுமய குழுவினருக்கு பொதுக்கட்டமைப்பு தொடர்பாக விளக்கம் அளிப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அமெரிக்க மற்றும் சீனத் தூதரகங்கள் இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றன. நாளை இந்தியத் தூதரகமும் இது தொடர்பான சந்திப்பை நடத்த உள்ளதாகத் தெரியவருகிறது. (32)

# புல்மோட்டை கனிய மணல் ஊழியர்கள் நேற்று முதல் சாகும்வரை உண்ணாவிரதம்

(திருமலை)

புல்மோட்டை கனியமணல் நிறுவனத் தொழிலாளர்கள் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம் பித்துள்ளனர்.

கடந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது இயற்கைக் கனிப்பொருள் மணல் கூட்டுத் தாபனத்தின் புல்மோட்டை தொழிற் சாலையின் ஊழியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 100 தொழிலாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பதவி விலக்கப்பட்டனர்.

இந்த நிலையில் தம்மை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி நேற்று முதல் ஊழியர்கள் ஆரம்பித் துள்ள சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டத்திற்கு ஆதரவுதெரிவித்து பிரதேசவாசிகளும் கதவடைப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்துள்ளனர். (32)

# மாணவர் எழுச்சிநாள் கண்காட்சிப் போட்டி பிற்போடப்பட்டதாக அறிவிப்பு

(திருமலை)

மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு திருகோணமலையில் இன்றும் நாளையும் நடத்தத் தீர்மானித்திருந்த கண்காட்சிப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக மாவட்டத்தின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்புரட்சி அறிவித்துள்ளார். அண்மைகால இயல்பற்ற சூழ்நிலையே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார் (32)

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியே தீருவேன்;

## சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா சூளுரை

(கொழும்பு)

எத்தகைய எதிர்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கினாலும் விடுதலைப் புலிகளுடன் இணைந்த உத்தேச பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியே தீருவேன் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சூளுரைத்துள்ளார்.

பொலன்நறுவை றோயல்கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உத்தேச பொதுக்கட்டமைப்பு "ஆழிப்பேரலை நிவாரண சபை" என்று மக்களுக்கு விளக்கமளித்தார். கொழும்பிலிருந்து கொண்டு யுத்தம் வேண்டும் என்றும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை வேண்டாம் என்றும் கூக்குரலிடுவோர் அங்கிருந்து வெளியேறி எல்லைக்கிராமங்களை வந்து பார்க்க வேண்டும். அப்போது தான் உண்மைநிலை புரியும்.

யுத்தம் வேண்டும் என்று கூக்குரலிடுவோர் தங்கள் பிள்ளைகளை யுத்தமுனைக்கு அனுப்பத்தயாரில்லை. அப்படியானால் அப்பாவிக் கிராமத்து இளைஞர்கள்தான் யுத்தத்தில் மடியவேண்டுமா? சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் உத்தேச பொதுக்கட்டமைப்பை நாட்டு மக்களில் 10 சதவீதமானோரே எதிர்க்கின்றார்கள். உத்தேசக் கட்டமைப்பானது விடுதலைப் புலிகளை சனநாயக வழிக்குக் கொண்டு வருவதற்கு உதவும் ஒரு நடைமுறையாகும். இதன் மூலம் ஈழம் என்ற இலக்கை அவர்கள் அடையமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒட்டுசுட்டான்-நெடுங்கேணி பிரதேச ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவி... பிரதேச செயலகங்களில் ஊர்தி உரிமையாளர்கள் நலன்கருதி வரும் இரண்டா... திகதியன்று இதுவரை தமிழீழப் பதிவு மேற்கொள்ளாத ஊர்திகளுக்கு ப... வினை மேற்கொண்டு 2005 ஆம் ஆண்டுக்கான வரியட்டையும் வழங்... படவுள்ளது.

ஊர்தியினைப்பதிவு செய்ய வரும்போது பின்வரும் ஆவணங்களையு... சமர்ப்பிக்க வேண்டும் என்பதனை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியி... அறியத்தருகின்றனர்.

பழைய கடவுச்சீட்டுக்குஅமைந்ததான கறுப்புவெள்ளை புகைப்பட... இரண்டு(02), ஊர்தியினைப் பதிய வருபவருடைய குடும்பப்பதிவு அட்டை... ஆயப்பகுதி தீர்வைச்சான்றின் நிழல்பிரதி, சிறிலங்கா ஆவணங்கள் அனைத்தி... நிழல்பிரதி, 18 முதல் 50 அகவைக்குட்பட்ட பிணையாளியுடன் குடும்பப்பதி... அட்டை ஆகியவற்றுடன், ஊர்தியுடன் வருகை தரல் வேண்டுமெனவும், காலை... 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணிவரையும் இச்செயற்பாடு... நடைபெறுமெனவும் தெரிவித்துள்ளனர்.

# பிரிட்டனில் மிகவும் மோசமான விபத்து;

## 83 ஆயிரம் லீற்றர் அணு கதிரியக்கத்திரவம் கசிவு!

(லண்டன்)

பிரிட்டனில் மிகவும் சக்திவாய்ந்த அணு கதிரியக்கத் திரவம் கசிந்துள்ளது. கடந்த 13 ஆண்டுகளில் நடந்த மிகவும் மோசமான விபத்து இது எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் பிரிட்டனில் செல்லா.`.பீல்டில் உள்ள பிரிட்டிஷ் தோர்ப் ரீபுராசஸிங் ஆலையில் நடந்துள்ளது. இதுகுறித்து இண்டிபெண்டன்ட் ஆன் சண்டே நாளேடு வெளியிட்டுள்ள செய்தியில் இந்த ஆலையில் ஏற்பட்ட மனிதக் கோளாறு மற்றும் இயந்திரக் கோளாறு குறித்து கடந்த மாதம் வெளியிடப்பட்ட தகவல் அறிக்கை மூலம் இது வெளியாகியுள்ளது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலே இந்த அணு கதிரியக்கத் திரவம் கசிந்துள்ளது.

ஒலிம்பிக் நீச்சல் குளத்தில் அரைவாசிப் பகுதிக்கு அணு கதிரியக்கத் திரவம் வெளியேறி சிறு குட்டையாக உருவாகியுள்ளது. இந்த ஆலையில் நடத்தப்பட்ட சோதனை அறிக்கையின் நகல் மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் நிறுவன ஊழியர்களின் கவனக்குறைவு மற்றும் பழுதடைந்த குழாய்கள் காரணமாகவே இந்த விபத்து நடந்துள்ளது எனபதை இத்தொழிற்சாலை ஏற்றுக் கொண்டுள்ளது.அணுத் திரவம் சென்று கொண்டிருந்த குழாய்களில் விரிசல்கள் ஏற்படும்போது வெளிப்படும் எச்சரிக்கை சமிக்ஞைகளை ஊழியர்கள் கண்டுகொள்ளாமல் இருந்ததும், குழாய்கள் மிகவும்மோசமாக வடிவமைக்கப்பட்டிருந்ததுமே கசிவுக்குக் காரணம் என்றும் அந்நிறுவனம் கடந்த சனிக்கிழமை ஏற்றுக் கொண்டுள்ளது. இதையடுத்து, அந்த ஆலையின் இதர குழாய்களிலும் விரிசல் ஏற்பட்டுள்ளதாஎன்பது குறித்து கண்டறியுமாறு அந்நிறுவனம் உத்தரவிட்டுள்ளது. மோசமான இந்த விபத்து நடந்துள்ளதால் காங்கோ நாட்டவருக்குச் சொந்தமான இந்த ஆலையை மீண்டும் இயங்கச் செய்வது கடினம் என்று பிரிட்டிஷ் அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவித்துள்ளனர். 83 ஆயிரம் லீற்றர் அணுகதிரியக்கத் திரவம் கசிந்து சிறுகுட்டையாக உரு வாகியுள்ளதை அதிகாரிகள் கடந்த மாதம் 19ஆம் திகதியே கண்டுபிடித்தனர்.

# 2005ஆம் ஆண்டிற்கான அபிவிருத்திக் கூட்ட...

## நேற்று யாழ் செயலகத்தில் இடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட 2005 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்திக் குழு... கூட்டம் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பின... மாவை சேனாதிராஜாவின் தலைமையில் அரசாங்க அதிபரின் செயலகத்தி... இடம்பெற்றது. கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்க... சிவநேசன், சுரேஷ் பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன், ஈழவேந்த... மற்றும் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட... பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 50 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்... செய்யப்பட்டு மொத்தம் ஐந்து கோடி ரூபா நிதியை செலவு செய்... குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. மாவட்டத்தின் கிராம மட்ட புனர்... மாண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக செலவிடுவது என இந்... கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

தேசிய மட்டத்தில் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்... தனது நிதி ஒதுக்கீடான 50 இலட்சம் ரூபா நிதியை கிழக்கு மாகா... மக்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடத் தீர்மானித்துள்ள... தெரிவித்துள்ளார்.

# சனாதிபதித் தேர்தலில் ஹெலஉறுமய

## தனித்துப் போட்டியிடத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதென ஜாதிக ஹெலஉறுமய தீர்மானித்துள்ளது.

இந் நாட்டுஅரசியல் தலைவர்கள் கட்சிஅரசியலினால் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் வகையில் எடுக்கும் முடிவுகளால் நாடு,மதம், சுற்றுச்சூழல் என்பன பெரும் சீரழிவுக்குள்ளாகி நாடு அதலபாதாளத்தை நோக்கிச் செல்கிறது.சனாதிபதி போன்ற பதவிகளின் பின்னால் ஒளிந்து கொண்டு இருப்பவர்கள் மக்களின் உரிமைகளை காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதனால் அதற்கு நேரடியாக முகம்கொடுத்து சவால் விடுக்க வேண்டியிருப்பதனால் ஜாதிகஹெல உறுமய சனாதிபதித் தேர்தலில் உறுதியாகப் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெலஉறுமயவின் கம்பஹா மாவட்ட பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும்போதே அவர், இவ்வாறு கூறினார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைக் கட்டியெழுப்ப சனநாயக மாற்ற ஒரு அமைப்பிற்கு நிதி வழங்கவிருக்கும் நிலையில் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் வைத்து ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ரத்தினதேரர் வெளிநாட்டவர்கள் மத்தியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார். ஹெலஉறுமயவைத் தவிர அந்தக் காரியத்தைச் செய்வதற்கு எவரும் முன்வரவில்லை என்றார். தேசிய ரீதியான கடமையையே தான்நிறைவேற்றியதாகவும் செற்ப பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனைத்து விடயங்களையும் மறைத்து மக்களின் உரிமைகளைக் காட்டிக் கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டமையினலேயேதான் அவ்வாறு செய்ததாகக் கூறினார்.

### பொதுக்...

அத்துடன் தமிழரின் தாயகப் பகுதி வடக்குக் கிழக்கு என்பதை ஏற்கவில்லை. ஆனால் வடக் கும் கிழக்கும் சிங்களவரின் தாயகப் பிரதேசம் என்பது தங்கள் நிலைப்பாடு எனத் தெரிவித்த அத்துரலியே ரத்னதேரர் ஒரே நாடு, ஒரே தேசியம் என்பதே தமது கொள்கை. இலங்கை சிங்களவர்களுக்கானது. இங்கே வாழும் மத, இன சிறுபான்மையினருக்கான உரிமைகள் பாதுகாக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி. வெளியேறுவது குறித்து தமக்கு சந்தேகம் இருக்கிறது. பொதுக்கட்டமைப்பை சனாதிபதி மேற்கொண்டால் கடுமையான முடிவுகளை தாம் மேற்கொள்வதோடு அரசை முழுவீச்சில் எதிர்க நேரிடும் எனவும் அரசை ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை எனவும் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

(32)

### அரசியல்துறை....

இப்போட்டியில் மகளிர் போராளிகளின் பல்வேறு விளையாட்டுக்கள் இடம்பெற்றன. 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்ட நிகழ்வு, துப்பாக்கி கழற்றிப் பூட்டுதல், சாக்கு ஓட்டம் மற்றும் அஞ்சல் ஓட்டங்கள், தாரா நடை, தடை தாண்டுதல் என்பனவும் உணவு உண்ணும் போட்டி,முட்டி உடைத்தல்,சங்கீதக்கதிரை எனப்ப...வகையான விளையாட்டுக்கள் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(ச)

# பொதுக்கட்டமைப்புக்கு ஒரு போது... ஆதரவு வழங்க மாட்டோம்

## - ஜே.வி.பி. மீண்டும் வலியுறுத்து

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு யார் ஆதரவு வழங்கினாலும் தாம் ஒருபோதும் அதற்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என ஜே. வி. பி. மீண்டும் தெரிவித்துள்ளது. நேற்று அந்தக் கட்சியின் அரசியல் பீடம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்குகிழக்கில் ஆழிப்பேரலையின் பின்னர் அமைக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பைக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வளங்களை விருத்திசெய்து கொள்ளப்போகின்றனர். எனவே அதன் மூலம் பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப்பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த நிலையில தாம் ஒருபோதும் அதற்கு அதனை அனுமதிக்கப்போவதில்லை என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது. இதே வேளை வடக்குகிழக்கில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள ... களை புனரமைப்பதற்குத் ... சனாதிபதியிடம் யோசனை ஒ... முன்வைத்துள்ளதாகவும் அ... குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழீழ...

மாவீரர்களையும் நினைவு கூர்ந்து ஜுன் 06 ஆம் நாளை மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனம் செய்து தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாணவர்களினால் எழுச்சியாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இவ்வாண்டு க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பரீட்சை ஜுன் ஆறு நடைபெற இருப்பதால் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஜுன் 02 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்நிகழ்வில் மாவட்ட, தேசிய மட்டத்தில் சாதனை புரிந்த மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தலும், எழுச்சி ஊர்வலமும், ஏனைய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

எனவே மாணவர் எழுச்சி நாளை எழுச்சியுடன் கொண்டாட அனைத்து மாணவர்களையும், ஆசிரியர்களையும், கல்விசார் பெரியர்களையும், மக்களையும் ஜுன் 02 ஆம் திகதி மாவட்டம் தோறும் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்துசிறப்பிக்குமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.

(சோ)

# ஊடகவியலாளர் நடேசனுக்கு... கொழும்பில் இன்று நினைவஞ்ச...

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டு ஒருவருடம் நிறைவடைவதையிட்டு இன்று கொழும்பில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் நடேசன் கடந்தவருடம் இனம் தெரியாத குழு ஒன்றினால் மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று நடைபெறவுள்ள நினைவஞ்சலிக் கூட்டத்தினை தமிழ் ஊடகவியலாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் ம... நடைபெறும் இந்தக் கூட்டத்... அனைத்து ஊடகவியலாளர்... கும் அழைப்பு விடுக்கப்பட்டு...

### மட்டு...

உடன்படிக்கை நடைமுறையில் உள்ளபோதும் தமிழ்மக்களுக்கு இயல்பு வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் தொடர்பாகவும் அரச படைகளின் அடாவடித் தனங்களுக்கெதிராக மக்களின் சாத்வீகப் போராட்டம் ஆயுத ரீதியில் அடக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இணைப்புச் செயலகமொன்றை கிளிநொச்சியில் அமைத்தல் தொடர்பாகவும் பேசப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

### சிறிலங்கா...

பொதுமக்களின் கோரிக்... அடங்கிய மனுவொன்று சிறி... படையினரிடம் கையளிக்... மெனவும் பாராளுமன்ற உறு... ஜெயானந்தமூர்த்தி கூறியுள்...

இன்று இடம்பெறவிருக்கு... ஆர்ப்பாட்டப் பேரணியில் பெ... மக்கள் கலந்து கொள்வார்... எதிர்பார்க்கப்படுகிறது.

### பேருந்து...

சேர்ந்த ஜேர்.அலக்ஸ்(வயது... மல்லாவியைச் சேர்ந்த யே... நாயகம் (வயது-28) ஆகிய... பேருமே இச்சம்பவத்தில் காய... துள்ளனர்.

வன்னிப் பகுதியில் இ... கண்டி வீதி வழியாக யாழ்ப்ப... நோக்கி வந்து கொண்டி... பேருந்தை யாழ்ப்பாணத்தி... அதேவீதி வழியாகத் தென்... நோக்கிச் சென்றுகொண்... பாரவூர்தி மோதியதில் இவ்... இடம்பெற்றது.

இதில் காயமடைந்த அனை... பேருந்தில் பயணித்தவர்கள் ... குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது